Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 388 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 24 ஆம் நாள் துல்கஃதா 11 6.4-63 சனிக்கிழமை இதழ் 57

போன்: 296 தந்தி: 'ரோகிணி'

S. R. S.

ஜவுளி மாளிகையில்

தமிழ் புதுவருஷத்துக்கான பட்டு நூல் ஜவுளி வகைகள் ஏராளமாக கைவசம் இருக்கின்றன.

இன்றே விஜயஞ் செய்யுங்கள் !

எஸ். ஆர். செல்லத்துரை,

2 6. கே. கே எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# சீனித் தட்டுப்பாடு: யாழ்ப்பாணபகுதியில்!

## கையிருப்பு இருந்தும் கள்ள மார்க்கட்டில் ராத்தல் 80சதம்!!

### பதுக்கல் ஆசாமிகளுக்கு எதிராக நடவடிக்கை வரும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலும், சுற்றுப்புறங்களிலும் இப்பொழுது சீனித்தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள சில கடைளில் ஒரு ருத்தல் சீனி எண்பது சதம் முதல் ஒரு ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது, பலகடைகளில் சீனித் தட்டுப்பாடு நிலவிவருகிறது. ஆனல் யாழ்ப் பாணத்திலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள பாவனை யாளர்களுக்குத் தேவையான சீனி கைவசமிருக்கிற தென்றும் சில "பதுக்கல்" வியாபாரிகள், வேண்டு மென்றே நாட்டில் சீனித்தட்டுப்பாட்டை நிலவச் செய்திருக்கிருர்கள் என்றும் உதவிஉணவுக்கட்டுப் பாட்டு பகுதியைச் சேர்ந்த அதிகாரி யொருவர் தெரி வித்துள்ளார்.

இங்குள்ள பல சில்லறைக் கடைகளில் சீனி பெறுவது பெரும் கஷ்டமாகவிருக்கிறது. ஏழு ருத்தல் சீனி கேட்டால் மூன்று ருத்தல் சீனி கொடுக் கப்படுகிறதென்றும், சிலவேளை களில் பாவனையாளர்களுக்குச் சீனி முற்ருகக் கிடைப்பதில்லை யென்றும் கூறப்படுகிறது, நேற் றுக் காலை சில கடைகளில் ஒரு ருத்தல் சீனி எண்பது சதமாக விற்பனை செய்யப்பட்டதென் றும், மாலையில் ஒரு ரூபாவாக உயர்த்தப்பட்டதென்றும்கூறப் படுகிறது. இதன காரணமாக பாவனையாளர்கள், சீனி வாங் குவதற்காக ஆறு, ஏழு கடை களில் விசாரிக்கவேண்டியிருக் கிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள சில மொத்த வியாபாரிகள்; சில் லறை வியாபாரிகளுக்கும், பாவ னையாளர்களுக்கும் சீனியைக் கொடுக்காமல் 'பதுக்கி' வைச் கிருர்கள் என்றும், யாழ்ப்பா ணத்தில் சீனித் தட்டுப்பாட்டை வேண்டுமென்றே உண்டாக்கு வது தான், (பதுக்கல்) மொத்த வியாபாரிகளின் உள் நோக்கம் என்றும் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக உதவி உண வுக் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத் திலும் மற்றும் சுற்றுப்புறங்களி லுமுள்ள பாவனையாளர்களுக் குத் தேவையான சீனி கைவச மிருக்கிறதென்றும், சில பதுக் கல் வியாபாரிகள், வேண்டும் என்றே நாட்டில் சீனித் தட் டுப்பாட்டை நிலவச் செய்திருக் கிருர்கள் என்றும் கூறினர்.

பாவனையாளர்களுக்குத் தேவையான சீனி போதியளவு கைவசமிருந்தும், சீனியை விற் பனை செய்யாமல் பதுக்கும் மொத்த வியாபாரிகள்மீது கடு மையான நடவடிக்கையெடுக் கப்படும் என்றும் கூறினர்.

சில்லறை வியாபாரிகளிடம் இதுசம்பந்தமாக விசாரித்த தில், மொத்த வியாபாரிகள் தங்களுக்குத் தேவையான சீனியை விற்பனை செய்கிருர் களில்லையென்றும், இதன் கார ணமாகப் பாவனையாளர்களு க்கு சீனியை விற்பனை செய்ய முடியவில்லையென்றும் கூறினர் கள்.

——

## ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

வாழைச்சேனை, வெள்ளி

ஆஸ்பத்திரி சுவீப்பின் 198-வது சீட்டிழுப்பு சென்ற வியாழக்கிழமை மாலை வாழைச் சேனை வெலிங்டன் தியேட்ட ரில் நடைபெற்றது. சீட்டிழுப் பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:.

**முதற் பரிசு**

12 J 0158 ரூ. 62,100

**இரண்டாவது பரிசு**

04 X 0636 ரூ. 31,050

**மூன்ருவது பரிசு**

15 G 0841 ரூ. 15,525

தலா 621 ரூபா பெறும் டிக் கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 13 Q 0879 | 06 O 0880 |
| 15 B 0737 | 21 O 0022 |
| 13 X 0537 | 08 T 0264 |
| 01 L 0893 | 16 O 0665 |
| 09 T 0481 | 05 O 0577 |
| 16 E 0743 | 13 U 0052 |
| 01 D 0721 | 15 A 0347 |
| 17 Z 0582 | 12 Z 0725 |
| 03 V 0565 | 12 Q 0402 |
| 18 F 0226 | 06 C 0914 |
| 16 W 0313 | 04 L 0168 |

——

## வியாழக்கிழமை புதிய மேயர் தேர்தல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரின் புதிய மேயர் தேர்தல் இம்மாதம் 11-ந் திகதி பிற்பகல் நடை பெறவிருக்கிறது.

மாநகரசபையின் பெரும் பான்மை குழுவினரின் உடன் படிக்கைப்படி சென்ற பத்து மாதங்களாக மேயர் பதவி வகித்து வந்த டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தமது பத வியை ராஜினமாச் செய்த தைத் தொடர்ந்து புதியமேயர் தெரிவு நடைபெறவிருக்கிறது

இம்மாதம் 11-ந் திகதி பிற் பகல் 3-30 மணிக்கு மாநகர சபையின் விசேஷ கூட்டம் புதிய மேயரைத் தெரிவு செய் வதற்காக நடைபெறும்.

மேயர் பதவிக்காக இப் பொழுதே பலர் தீவிரமாக ஆதரவு தேடிவருகின்றனர்.

## 'முக்கிய பிரச்னை'

புதுடில்லி, ஏப், 5

ஐரோப்பிய பொதுச் சந் தைக் கமிஷன் தலைவர் டாக் டர் ஹார்ல்ஸ்டைன் புதுடில்லி வந்தார். பாரதத்தின் பொரு ளாதார முயற்சியில், கமிஷன் ஒத்துழைக்கத் தயாராய் இருப் பதாயும், இந்தியாவின பிரச் னையைத் தற்கால உலகில் முக் கிய பிரச்னையாகக் கருதுவதா யும் அவர் கூறினர். டாக்டர் ராதாகிருஷ்ணன், ஸ்ரீ நேரு ஆகியோரை அவர் சந்திப்பார்.

## சரசாலைக் கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, வெள்ளி

சரசாலை இரட்டைக் கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். சாட்சி யங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் முரணனதாக இருப்பதாக நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி சரசாலை யில் சரவணை, சின்னத்தம்பி ஆகியோரை சுட்டுக் கொலை செய்ததாக முத்தையா கண பதிப்பிள்ளை, சின்னையா சுப் பிரமணியம், ஆறுமுகம் பொ ன்னையா, பொன்னம்பலம் சுப் பிரமணியம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரிகளின் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு வாளர்கள் எஸ். சுந்தரலிங்கம் கே. வி. எஸ். சண்முகநாதன் ஆகியோரின் உதவியுடனும் திருவாளர்கள் வி. கனகசபை, எஸ். கே. திரவியநாயகம், ஆர். டி. சிவகுரு, வீ. செல் லத்தம்பி ஆகியோரின் அனு சரணையுடனும் ஆஜரானர்.

சென்ற தவணையின் போது எதிரிதரப்பில் ஆஜரான சிரே ஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொகுப்புரை நிகழ்த்தினர். மாதிரிப்படம் வரைபவரும் படப்பிடிப் பாளரும் சாட்சியமளிக் காத காரணத்தினல் தீர்ப்ப ளிப்பது ஒத்திவைக்கப்பட்டி ருந்தது.

இன்று காலை வழக்கு எடு த்துக் கொள்ளப் பட்டதும் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

வைத்திய சாட்சியங்களின் மூலம் சூடு மேலேயிருந்து கீழே நோக்கி சுடப்பட்டுள்ள தாக தெரிகிறது.ஆனல் கண் கண்ட சாட்சியங்களான, தெய் வானைப்பிள்ளையும் மகன் தேவ ராசாவும் நேரே நின்று முன் னுக்குபின்னக சுட்டதாகச் சாட்சியமளித் துள்ளார்கள். நாகமுத்து தனது சாட்சியத் தில் எதிரிகள் நால்வரையும் கண்டதாகவும், அதேநேரத் தில் தெய்வானை குழறிய சத் தம் கேட்டதாக கூறியுள ளார். எதிரிகளையும் அந்தத் தெய்வானை குழறிய சத்தத் தையும் தொடர்புபடுத்த வில்லை, அடுத்தநாள் காலை சரவணை வீட்டிற்கு சென்ற போதும், தான் எதிரிகளைக் கண்டதாக யாரிடமும் நாக முத்து கூறவில்லை. தனது சொந்தக்காரர்கள் பிணமாக கிடந்த போதும் அவர் தனது தோட்டத்திற்கு சென்று, பின் மாலை திரும்பினர். மாஜிஸ் டிரேட் சம்பவம் நடந்த இட த்திற்கு வந்தபோது நாக முத்து அங்கு நின்றும் வாக் குமூலமளிக்காமல், மாஜிஸ்டி ரேட் பேனபின் இன்ஸ்பெக் டரிடம் வாக்குமூலமளித்தார். மாஜிஸ்ரேட் வந்தபோது தான் அங்கில்லையென்று கூறியுள் ளது பொய்யெனக் கருதப்படு கிறது.

வழக்காளி பக்கத்து சாட் சியங்கள் பலமுள்ளதாயிருந் தால் மேல் கோட்டிற்கு அனு ப்பவேண்டியது நீதிபதியின் கடமை. ஆனல் இந்த வழக் கில் சாட்சியங்கள, வித்தியா சமாகவும் முரண்பாடாகவும் காணப்படுகிறது.

## வண்ணையில் தேர்த் திருவிழா

இன்று வண்ணை சிவன் கோவில் தேர்த் திருவிழா. பகல் 11 மணிக்கு பூசை. 12 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் தேர்களில் ஏறி ஊர்வலமாக வந்து, மாலை 5 மணிக்கு நிலைக்கு வந்துசேருவர்.

——

## "கொழும்பு யோசனை விளக்கங்களில் வித்தியாசமில்லை"

—பீலிக்ஸ்

கொழும்பு, வெள்ளி

இந்தியாவுக்கும் சீனவுக்கும் இடையே கெடுபிடி யுத்தம் தீவிரமாக நடைபெற்றுவருகிற தென்றும்,பிரதமமந்திரியின் சம ரசமுயற்சிக்குப்பின்பும் இந்நிலை மையில் மாற்றம் இல்லை என் றும் பாதுகாப்பு வெளிவிவகா ர மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்,பாரா ளுமன்றத்தில் கூறினர். "சீன பிரதமரிடம் இந்தியப் பிரதம ரிடமும் கொழும்பு யோசனை களை இலங்கைப் பிரதமர் விளக்கிய போது நான் அங்கிருந்தேன். இந்த விளக்கங்களில் வித்தியாசம் கிடையாதென்றும் பீலிக்ஸ் கூறினர். இரு நாடுகளின் சமர சத்துக்கும் பிரதமர் தொடர் ந்து பாடுபடுவார் எனவும் அவர் கூறினர்.

## கேள்வி விளம்பரம்

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதி, (ஊச்சம்புலம் ஒழுங்கை) திருத்த வேலைக்கு ரூபா 10,000/- மும் அதற்கு மேலும் பதிவுசெய்த கொந்தராத்துக்காரர்களிடமிருந்து கேள்விகள் வேலணைக் கிராமசபை அக்கிராசனரால் 13-4-63 ம் ஆண்டு சனிக்கிழமை காலை 9-30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலணைக் கிராமசபைக் காரியாலயத்தில் ரூபா 50/கட்டுப்பணமாகக் கட்டியதன் பேரில் உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்கள் 11-4-63 காலை 12 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரத்தின் உண்மைப் பிரதி, அக்கிராசனர் கிராம சபை, வேலணை எனவும் மூலப் பிரதி உதவி உள்ளூராட்சி அதிபர், யாழ்ப்பாணம் எனவும் விலாசம் இடப்பட்டு 14-4-63 காலை 9-30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ப்திவுசெய்த தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மேற்படி வேலை விபரங்கள் யாவும் வேலணைக் கிராம சபைக் காரியாலயத்திலோ அல்லது உள்ளூராட்சி உதவி அதிபர் காரியாலயத்திலோ (யாழ்ப்பாணம்) காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளவும்.

க. சதாசிவம்,
அக்கிராசனர்,
வேலணைக் கிராம சபை,
கி. ச. காரியால்யம்,
வேலணைக் கிராமசபை.
4-4-63 853

## வரி விளம்பரம்

### தேவை

குளிர்பானங்கள் டெலிவரி செய்வதற்கு சொந்தத்தில் சைக்கிள் வைத்திருக்கும் வாலிபர்கள் தேவை. நாளொன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரை சம்பாதிக்கலாம். விபரங்களுக்கு: நம். 34, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 852

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்ற லோக இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

மட்டக்களப்பில் ஒரு ஹோட்டலுக்கு மனேஜரும் இரண்டு திறமையான சமயல்காரர்களும் தேவை. மனேஜர் சம்பளம் 125-ம் சாடபாடும் பிணை: 2000 ரூபா.

8-ந் திகதி யாழ்ப்பாணம் நாக விகாரையில் 10 மணிக்கும 12 மணிக்கும இடையில் நேரில் வரவும். எஸ். ஏ. கந்தசாமி 902

### ST. JOHN'S ACADEMY
**Chundikuli, Jaffna.**

Wanted from May 1963 qualified teachers for G C E, Varsity Entrance and H S.C. Classes – Arts & Science Subjects. Day & Evening Classes. Apply to the Director before 10th April.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரிலிருந்து சிறிது தூரத்தில் தென்னை, பனை, மா மரங்களும், கிணறும், பாதையுமுள்ள பத்துப்பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. இதை நாலாகப்பகிர்ந்து வாங்கலாம். ஒருபரப்பின் விலை இரண்டாயிரம ரூபா இரண்டரைப் பரப்பு காணியை வாங்கும் ஒருவர் அதன் முழுவிலையின் அரைவாசித் தொகையை முதலில் கொடுத்து மிகுதியை மாசம் நூறுரூபா வீதம் கொடுக்கலாம், செல்லத்துரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

## யு. என். பி. கட்சிக்காரருக்கு

### சுதந்திரக் கட்சியினரின் ஆதரவு

கெலிஓயா, வியாழன்

கங்காபலதா கிராம சபைத் தலைவராக யு. என். பி.யைச் சேர்ந்த திரு. குவெண்டஸ் ரோய் டி' சில்வா சுதந்திரக் கட்சி அங்கத்தவரின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டார்.

சுதந்திரக்கட்சிச் சார்புள்ள அங்கத்தவர்கள் இந்த கிராமசபையில் 12 பேர் இருந்தும் யு. என். பி. கட்சியைச் சார்ந்த 7 அங்கத்தவர்களுள் ஒருவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

திரு. டி' சில்வா 12 வாக்குகளைப் பெற்றார். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. பேர்ஸி அன்குனவெல 7 வாக்குகளைப் பெற்றார். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 5 அங்கத்தவர்கள் யு. என். பி. அங்கத்தவருக்கு சார்பாக வாக்களித்தனர்.

---

பங்களூர், ஏப். 5

மைசூர் ராஜ்யத்தின் பெயரை 'கர்நாடகம் என மாற்றிக் கோரும் மசோதா தேசீய நெருக்கடியை முன்னிட்டு காலவரையறையின்றி ஒதுதி வைக்கப்பட்டது.

### விற்பனைக்கு

நுணுவில் மருதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் 22 பரப்பு குடியிருப்புக் காணிவிற்பனைக்கு உண்டு. விபரங்களை கீரிமலை சிவன் கோயில் தெற்கு வீதி ச. வேணுகுசாம்பாளிடம்தெரிந்து கொளளலாம். 854

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலுக்கருகாமையில் குடியிருப்புக்கு வசதியான காணி 1 4/3 பரப்பு விற்கப்படும். விபரங்களுக்கு வவுனியா கச்சேரி, க. சிவசம்புவுடன் தொடர்புகொள்ளவும். 855

### காணி விற்பனைக்கு

வவுனியா மாவட்டத்தில் மாங்குளம் பிரிவில், ஊஞ்சால் கட்டி குளத்தின் கீழ் 10 ஏக்கர் திறம் வயல் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் தொடர்பு கொள்ளவும். 83/1, B. A. தம்பிலேன், வண்ணார்பண்ணை. 860

### தேவை

ஓர் ஆபீஸ் மனேச்சர் பிணைப் பணம் ரூபா 1500, சம்பளம் ரூபா 125-00.

ஓர் வான் சேல்ஸ்மன் பிணைப் பணம் ரூபா 1500, சம்பளம் ரூபா 150-00.

ஓர் வான் டிரைவர் பிணைப் பணம் ரூபா 1000, சம்பளம் ரூபா 125-00.

7-4-63 பிற்பகல் 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் நேரில் மனுச்செய்க.

இருபாலாரும் கோரப்படுகின்றனர்.

P. K. இராசரத்தினம், வடமாகாண மலிபன் ஏச்சண்ட், 51, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 859

### விற்பனைக்கு

30 வெள்ளை லெக்கோன் கோழிகள் உண்டு. விபரங்களுக்கு: ப. செல்லையா, இளைப்பாறிய கிராம அதிகரி, கொக்குவில் கிழக்கு. 858

### சன்மானம்

விநோதன்ஸ் ஸ்தாபனத்தின் மானேஜர் திரு. எம்.சபாபதிப்பிள்ளை மோட்டார்வானில் சென்று கொண்டிருக்கையில் பல முக்கிய தஸ்தாவேஜுகளடங்கிய தமது 'கைப்பை'யை தவறவிட்டுவிட்டார். இதைக்கண்டெடுத்துக்கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 'விநோதன்ஸ்', ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 862

**ஆசிரியருக்குக் கடிதங்கள்**

## மகாநாட்டைக் கூட்டுவதுயார்?

சமஷ்டிக் கட்சி நேரடிநடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறதென்றும் அதைப் பற்றி அபிப்பிராயங்கள் பலரும் பலவிதமாகக் கூறுகின்றார்கள். சிங்களத்தலைவர்களும் சிலர் அபிப்பிராயங்கள் கூறியிருக்கிறார்கள். தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் அபிப்பிராயம் கூறியிருக்கிறார். அவர் தமது பழைய எண்ணத்தையே கூறியிருக்கின்றார். வேறு விசேஷம் எதுவும் குறிப்பிடத்தக்க அளவு இல்லை எனலாம். தமிழரசுக்கட்சி இந்த அபிப்பிராயங்களை நோக்கும் இவையெல்லாம் ஒரு விதமான இயலாத்தன்மையிலிருந்து பிறந்த தோல்வி மனப்பான்மையைக் காட்டுகின்றனவேயன்றிவேறில்லை. சிங்களத்தலைவர்கள் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாயிருந்தது 1961-ம் ஆண்டில் நிகழ்ந்த சத்தியாக்கிரக இயக்கமே. இப்போதே பொருளாதாரத்தில் மோசமாகிக் கொண்டிருக்கும் அரசாங்கம் இப்படியான செயல்கள் அடிக்கடி நிகழ்வதினால் நிலைமை மேலும் மோசமாகும் என்பதையுணர்ந்த நாட்டுநலனில் அக்கறை கொண்ட சிலதலைவர்கள் இவ்விஷயத்தில் உடனடியாக நடவடிக்கைஎடுத்து தீர்க்கவேண்டுமென்று கூறுவது நியாயமே. ஆனால் அரசாங்கம் இவ்விஷயத்தில் கவலையீனமாகவே இருக்கின்றது என்பது நிச்சயம்.

வட்டமேசை மகாநாடுபற்றி அடிக்கடி சிலகாலமாகக் கூறப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கம் எதுவித அக்கறையும் காட்டவில்லை. இது விஷயத்தைத் தீர்த்து நாட்டில் ஒற்றுமையையும் அதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினல் எப்பொழுதோ தீர்த்திருக்கலாம்"

அரசாங்கக் கட்சியே மகாநாட்டைக் கூட்டவேண்டும். மற்றைய கட்சிகள் கூட்டுவதில்மயனில்லை. பொறுப்புள்ளதாய் இருக்கும் அரசாங்கக் கட்சி கூட்டினல் தான் விஷயத்திற்கு மதிப்பு ஏற்படும் விஷயம் காரியப்படவும் எதுவாகும்.

ஆனல் அரசாங்கம் இந்த முயற்சியில் ஈடுபடுமா?

நயினதீவு, க. சி. அம்பலம்.

## திருக்கோணமலை

ஸ்ரீ கோணசலம் அல்லது திருக்கோணமலையென்றபெயர் எவ்வாறு வந்ததென, ஆராயுங்கால், கும்பகோணக்ஷேத்திரத்தை அப்பர் சுவாமிகள் 'குடமூக்கே என் பீ ர ா கில்' என்று பாடியிருப்பது நினைவிற்கு வருகின்றது கும்பம்—குடம்; கோணம் - மூக்கு எனவே, நெடிதுயர்ந்து கடலுக்குள் நீண்டிருக்கும் கோணமலையானது (நில மடந்தையின்) மூக்கென்று சொல்லக்கூடியதாய்த் தோற்றமளிப்பதால் கோணமலையென்றழைக்கப்படலாயிற்று. சிங்கள மொழியிலிருந்தோ, அன்றி வேறு தமிழ்சொற்களின் சிதைவாகவோ இப்பெயர் வந்திருக்கலாமென ஐயுற்று இடர்ப்படுவதை விடுத்து, மேற்கூறியாங்கு நேரடியாகப் பொருள் சொல்வதே பொருத்தமாகும். இதை சிவநேசச் செல்வர்கள் கவனிப்பார்களாக.

சி. எஸ். கணபதிஐயர்.
சுன்னுகம்.

## மொழி முக்கியம்

மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண வட்டமேசை மகாநாடு கூட்டப்படவேண்டுமென்றும் தமிழர்கள் சிங்களவரின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டுமென்றும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வெளியிட்ட கருத்து குறிப்பாக தென் பகுதியிலுள்ள பத்திரிகைகளால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. ஜி. யின் கருத்துக்கு அளிக்கப்பட்டுள்ள இவ்வித ஆதரவு தமிழரசுக்கட்சியினரின் கோரிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகக் கருதப்படக்கூடாது.

தமிழர்களின் போராட்டத்தில் மொழிப்பிரச்னை மிக முக்கிய பங்கு கொண்டுள்ளது.

(அ) தமிழர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் காணித்தேவையும் இருக்கும்பொழுது தொன்று தொட்டு தமிழர்கள் குடியிருந்து வரும் இடங்களில் தெற்கிலுள்ள சிங்களவர்களைக் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது. (ஆ) இலங்கை - இந்திய தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க மறுப்பது. (இ) நியமன விஷயங்களில் இனரீதியிலும் சமயரீதியிலும் பாகுபாடு காட்டுவது. ஆகிய விஷயங்களும் தமிழர் பிரச்னையில் முக்கியம் வாய்ந்தவை.

ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கைபெரும்பான்மை சமூகத்தினரால் எதிர்க்கப்பட்டதை அறிந்த திரு. ஜி ஜி. பொன்னம்பலம் காலம் சென்ற திரு. சேனநாயகாவின் தலைமையில் இயங்கி வந்த யு. என். பி. யுடன் சேர்ந்தார். அவரது ராஜதந்திரத்தை சிங்களத் தலைவர் ஆதரிக்கவில்லை.

ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள சிங்களக் கட்சியின் ஒத்துழைப்பெற திரு. செல்வநாயகம் செய்த நேர்மையான முயற்சிகள் பற்றி எல்லோரும் அறிவார்கள்.

திரு. ஜி ஜி.யின் புதியமுயற்சிகள் மொழிப்பிரச்னையிலாவது வெற்றி பெறவேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். ஜே குணசேகரம்.
கோப்பாய்.

---

## 'தோட்டப்பிள்ளைகளின் கல்வி கவனிக்கப்படவில்லை'

### கல்வி மந்திரிக்கு தொண்டமான் கடிதம்

கொழும்பு, வெள்ளி

மலைநாட்டுக் குழந்தைகளின் கல்வித் தேவைகள் முற்றாகக் கவனிக்கப்படுவதில்லை, என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் எம். பி. யுமான திரு. தொண்டமான் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. தொண்டமான், கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"27 மாணவர்களுக்கு மேல் உள்ள இடங்களில் தோட்டப் பாடசாலைகள் நிறுவலாம் என அரசாங்கம் அனுமதித்திருக்கும் போது கல்வி டைரக்டர் தோட்டப்பிள்ளைகளின் கல்வி வசதிகளை சட்டப்படி தோட்ட நிர்வாகமே செய்ய வேண்டுமென வகுத்து வருகிறார். தகுதியுள்ள தோட்ட மாணவர்களை அண்மையிலுள்ள பாடசாலைகளில் அனுமதிக்க சட்டம் இடம் கொடுத்தும், தோட்டப்பகுதியைச் சேர்ந்த உதவி வித்தியாதிபதி அவ்விதம் தோட்ட மாணவர்களை அனுமதிக்க மறுத்து வருகிறார். நாம் உங்களைப் பேட்டி கண்டபொழுது எல்லாத் தோட்டப் பாடசாலைகளுக்கும் நவம்பர் மாதத்தில் வகுப்பேற்ற பரீட்சை நடத்தி தேசிய பாடசாலைகளில் வருடத் தொடக்கத்தில் அனுமதிக்க ஒப்புக் கொண்டீர்கள். அதுபற்றி என்னென்ன ஒழுங்குகள் செய்துள்ளீர்கள் என்பது பற்றியும் அறிய விரும்புகின்றேன்.

## சைவ மகாநாடு

### நாவலப்பிட்டியில் இன்று ஆரம்பம்

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் நடத்தும் சைவ மகாநாடு சனிக்கிழமை நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. வித்துவான் வ. செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கும் மகாநாட்டினை திரு. க. சபா ஆனந்தர் தொடக்கி வைப்பார்கள்.

திருவாளர்கள் வே. சங்கரப்பிள்ளை, இ. செல்லத்துரை, இ. நவரத்தினம், நம. சிவப்பிரகாசம், இ. திருநாவுக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். திருமுறை இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இம் மகாநாட்டினைத் தொடர்ந்து சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் மகாநாட்டில் சமயப்பிரசாரம் செய்யவிருப்பதாகவும் தெரிகிறது.

## நீச்சல் வீரருக்கு

### ஆசிரியர்சங்கம் வரவேற்பளிக்கும்

யாழ்பபாணம், சனி

அகில உலக நீச்சுச் சாதனையை வெற்றி கொண்ட நீச்சல் மன்னன் ஆனந்தனுக்கு வாலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்கம் வரவேற்புபசாரம் அளிக்கவிருக்கிறது. செவ்வாய்க்கிழமை மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் வரவேற்பு வைபவம் நடைபெறவிருக்கிறது. ஆனந்தன் மல்லாகம் சந்தியிலிருந்து விழாமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில் கோர்ட்டிற்கு பளு அதிகம்

கொழும்பு, வெள்ளி

தொழில் விவகாரக் கோர்ட்டில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்படாமல் இன்னும் 6,300 விவகாரங்கள் இருக்கின்றன. தொழில் விவகாரமாக 250 வழக்குகளையே ஒரு மாதத்தில் விசாரிக்க முடிகிறது. தொழில் விவகாரக் கோர்ட்டிற்கு ஐந்து அதிபர்கள் மாத்திரமே இருக்கிறார்கள். மேலும் நான்கு அதிபர்கள் தேவைப்பட்டாலும் அந்த பதவிக்கு குறைந்த சம்பளம் வழக்கப்படுவதால் அவ்விடங்களை நிரப்புவது பெரும் கஷ்டமாகவுள்ளது.

## கிராமசபை இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், சனி

பல்லவராயன்கட்டு கிராம சபையின் 4-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள இம் மாதம் 25-ம் திகதி ஏற்றுக்கொள்ளப் படவிருக்கிறது.

அச்சுவேலி கிராமசபைப் பொதுத்தேர்தல் இம்மாதம் 23, 24-ம் திகதிகளில் நடைபெற விருப்பதாகவும் அறிவிக்கபபட்டுள்ளது.

## கந்தபுராணப் படிப்பு

சுன்னுகம், வெள்ளி

புன்னலைக் கட்டுவன் ஆயர் கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படனத்தின் பூர்த்தியாக வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்பு நடைபெற்றது. இவ்வாலயத்தில் கந்தப்புராணப்படிப்பு 185 வருடமாகத் தொடர்ந்து படிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# "இலங்கை அரசாங்கத்தின் மொழிச் சட்டம் தமிழரை அறவே புறக்கணித்து விட்டது"

## இந்தியப் பத்திரிகை கருத்து

புதுடில்லி, ஏப். 4

**இலங்கையிலுள்ள தமிழர்களின் கோரிக்கைகளை எந்த விதத்திலும் புறக்கணித்துவிட முடியாது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கை நன்கு பிணைக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தினரை அறவே அலட்சியம் செய்வதாக இருக்கிறது. அவர்களது சட்டரீதியான உரிமைகளை அரசாங்கத்தின்மொழிக் கொள்கை மறுப்பதாகவிருக்கிறது.**

இவ்வாறு இந்தியப் பத்திரிகையான 'இந்தியன் எகஸ்பிரஸ்' தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் மீண்டுமொரு மொழிப் போராட்டம் இடம்பெறும்போல் தோன்றுகிறது. தமிழரசுக்கட்சியினர் கிட்டமிட்டுள்ள சட்டமறுப்பு இயக்கத்தை அவ்வாறு நடத்தாது அவர்கள் கோரப்பட்டாலன்றி அவ்வித நிலைமை தோன்றுமென்றே ஊகிக்கலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம் திணிக்கப்படுவதை ஆட்சேபித்தே இவ்வாறு இவர்கள் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்கள். அவர்களின்கோரிக்கையில் எவ்வளவு நியாயமிருந்தாலும் இந்தச் சட்டமறுப்பு இயக்கம் பெரிய அளவில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும். அத்துடன் அதிகாரிகளின் கடுமையான சட்டம் அதிகரிக்கப்படும். 1958-ம் வருடத்திலும் 1961-ம் வருடத்திலும் இவ்வித குழப்பங்கள் ஏற்பட்டன.

இலங்கையில் மொழிவேற்றுமைகள், சமய, வகுப்பு வேற்றுமைகளை அதிகரித்துவிடச் செய்ய வழிகோலிவிடும் என்றே கூறத் தோன்றுகிறது. குழப்பத்தைத் தவிர்த்து தமிழர்களது மொழிக்கும் கலாசாரத்துக்கும் குறைந்தளவு பாதுகாப்பாவது அளிக்க இலங்கையிலுள்ள நல்லெண்ணம் கொண்ட எல்லோரும் வகை செய்யலாம்.

சிங்களம் சட்டபூர்வமாக அரசகரும மொழியாக்கப்பட்டிருக்கும் சமயத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மொழியான தமிழும் இந்த மாகாணங்களில் அரசகரும இணைமொழியாக ஆக்கப்படாதிருப்பதற்கு எவ்வித காரணமுமில்லை.

இந்தப் பகுதிகளில் நீதிமன்ற மொழி சிங்களம் மட்டும்தானென வற்புறுத்துதல் தமிழர்களுக்குப் பெரிதும் இடைஞ்சலையும் கஷ்டத்தையும் கொடுப்பதாகவிருக்கும். அத்துடன் இரண்டாமதர பிரஜைகளாகவும் அவர்களது நிலையைக் குறைத்துவிடும்.

தமிழர்களது உள்ளக் கிடக்கையும் மொழி அபிமானமும் பல தடவைகளில் அவர்களால் உறுதியுடன் வெளிப்படுத்தப்பட்டன. இலங்கை அரசாங்கம் பரந்த நோக்கோடு ராஜதந்திர முறையில் இதைக் கையாள வேண்டும்.

### இந்தியாவை பின்பற்றலாம்

இந்த விஷயத்தில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை பின்பற்றலாம். இங்கு 14 மொழிகளும் தேசியமொழிகளாக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் துணைமொழியாக இருக்கிறது.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து இதுவிஷயத்தில் ஒத்துப்போவதற்கு வழியிருக்கிறது.

மொழிபேதங்களும் வகுப்பு வேறுபாடுகளும் நீக்கப்படவேண்டுமென இரு சமூகங்களுக்கிடையேயும் குரல்கள் எழுப்புவது நல்ல அறிகுறி என்றே சொல்லத் தோன்றுகிறது.

செனட்டில் நிதிமந்திரி திரு. ஸாம். பி. ஸி. பெர்னாண்டோ தமிழர்களின் கஷ்டங்களைப் போக்குவதுபற்றி அரசாங்கம் ஆலோசனைசெய்து வருவதாக தெரிவித்தார். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியினரின் உத்தேச சட்டமறுப்பு இயக்கத்தை விட்டுவிடும்படியும் வட்டமேசை மகாநாடு ஒன்றுகூடி மொழிப் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மொழிப்பிரச்னை பற்றி ஆராய 1961-ம் வருடம் அவசரகாலத்தின்போது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இரு கமிட்டிகளின் அறிக்கைகளையும் வெளியிடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் என்ன காரணத்துக்காகவோ இந்த அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

இந்தப் பிரச்னைக்கு அரசாங்கமும் தமிழர்களும் ஒன்றுகூடி நல்லதொரு தீர்வுகாண முழுமுயற்சி எடுக்கவேண்டும்.

---

## நேப்பாள சட்டசபை புதுவருடத்தில் ஆரம்பமகும்

காட்மாண்டு, ஏப்ரல் 4

நேபாளத்தில் புதிதாக வகுக்கப்பட்ட பஞ்சாயத்து அரசியல் அமைப்புப்படி சமீபத்தில் நேபாளத்தின் சட்ட சபைக்கான மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்கள் அநேகமாக முடிந்து இதுவரை 80 இடங்களுக்கு முடிவுகள் தெரிந்துவிட்டன.

பஞ்சாயத்து அரசியலமைப்பின்கீழ் அமைக்கப்படும் இந்த சட்டசபை தேசிய பஞ்சாயத்து என்று குறிப்பிடப்படுகிறது. இந்தத் தேசிய பஞ்சாயத்தில் மொத்தம் 109 மெம்பர்கள் இருப்பார்கள். இச்சபை நேபாளத்தின் புதிய வருடப்பிறப்புத் தினமான ஏப்ரல் 14-ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## புகைபிடிக்க தடை!

அமிர்தசரஸ், ஏப். 5

கல்வி நிலையங்களின் எல்லைகளுள் புகைபிடிப்பதற்கு பஞ்சாப் அரசாங்கம் தடைவிதித்துள்ளது. பள்ளிக்கூட ஆசிரியர்கள் புகையிலையை எந்த வடிவத்திலும் உபயோகிக்கக் கூடாதென அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

---

## 50 வருடக் காதல்!

லண்டன், ஏப்.3

"உன்னையோ திருமணம் செய்துகொள்கிறேன்" என்றுஒரு இளம்பெண்ணிடம் வாக்குக் கொடுத்துச் சென்ற காதலன் திரும்ப வேயில்லை. 50 வருடங்கள் கழிந்தன. அவள் மனம் உடையவில்லை. வேறொருவனைக் கைப்பிடிக்கவில்லை. காலமெல்லாம் காத்திருந்தாள்.

அவளது 50 வருடக் காதல் இப்போது 72வது வயதில் நிறைவேறுகிறது. இந்தப் பெண்ணின் பெயர் பாலி ஆன்ரோசன். இப்பெண்ணின் காதலன் பெயர் பில்லி வார்டு. இவர்கள் இருவரும் இளம் வயதினராக இருந்தபோது ஒருவரை ஒருவர் காதலித்தனர். திருமணம் செய்துகொள்ள முடிவுசெய்து மோதிரம் மாற்றிக்கொண்டனர். இதற்குள் முதலாவது உலகயுத்தம் மூளவே பில்லிவார்டு யுத்தமுனைக்குச் சென்றுவிட்டார். யுத்தத்தில் இருந்து திரும்பிய அவர் தனது காதலியை மறந்து வேறொரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். அவருடைய முதல் மனைவி போனவருடம் இறந்துபோகவே தனது பழைய காதலி பாலிரோசனுக்கு கடிதம் எழுதி திருமணம் செய்துகொள்ள தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

காலமெல்லாம் காத்திருந்த பாலி இதை ஏற்றுக்கொண்டாள். இப்போது பில்லிவார்ட்டுக்கு வயது 71. பாலிக்கு வயது 72 திருமணத்துக்குப் பிறகு பாலி நாட்டிங்உறாமில் ஆம்ப்லே என்ற இடத்தில் பில்லி வார்டுடன் குடித்தனம் ஆரம்பிப்பாள்.

கடந்த அரை நூற்றுண்டு காலமாக காதலனின் மோதிரத்தை கழற்றாமல் போற்றிப் பாதுகாத்த பாலி கூறியது இதுதான்: "இந்த நாள் வரை நான் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்வது பற்றி எண்ணிக்கூடப் பார்க்கவில்லை."

---

## அமெரிக்க உருக்கு உற்பத்தி

நியுயார்க், ஏப்ரல் 4

இந்த ஆண்டு அமெரிக்காவில் உருக்கு உற்பத்தி 10 கோடியே 10 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1957-ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் உருக்கு உற்பத்தி பெருகி வருவதாக வாணிபத்துறை அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் உற்பத்தி 98,300,000 டன்கள்

உலக உருக்கு உற்பத்தியில் அமெரிக்கா தற்போது 25.7 சதவிகிதம் உற்பத்தி செய்வதாகவும் 17 ஆண்டுகளுக்கு முன்னால் அது 46 சதவிகிதமாக இருந்தது என்றும் வணிகத்துறை அறிவிக்கிறது.

---

## இந்திய உப ஜனதிபதி நாசருடன் பேச்சுவார்த்தை

கெய்ரோ, ஏப். 5

இந்திய உப-ஜனதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசெயின் நேற்று இங்கு ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸருடன் சுமார் ஒருமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அரபுலீக் தலைமைக்காரியதரிசியையும் டாக்டர் ஸாகிர் ஹுசெயின் சந்தித்துப் பேசினர்.

நேற்றிரவு ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி அளித்த விருந்துபசார மொன்றிலும் அவர் கலந்து கொண்டார்.


யாழ்ப்பாணக் குடாநாட்டில்

**வில்லியம்ஸ்**

பிஸ்கட்டுகளுக்கு

ஏக விநியோகஸ்தர்கள்

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**

ஆஸ்பத்திரி வீதி, : யாழ்ப்பாணம்.

## மணி வாக்கு

கடவுளே பலபல சமயங்களையும் 'அதிலுள்ள பக்தர்களைப் போல்' உண்டாக்கினர். அப்படியிருக்க எனது அயலவரின் மதம் தாழ்மையானதென்றும் அவர் தமது மதத்தை விட்டு, என்மதத்துக்கு மாறிவிட வேண்டுமென்றும் ரகசியமாகவும் கூட நான் எப்படி எண்ண முடியும்?

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU, National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 24 உ (6-4-63)

# தாய்லந்து 'இராமன்' முடிசூடிய 181 வது ஆண்டு விழா

## தாய்லந்து மக்கள் இன்று கொண்டாடுகின்றனர்

சாதாரண ஓர் அரசாங்க அதிகாரியின் மகனாக 1737-ம் ஆண்டில் அயோத்தியாவில் பிறந்த தாந்துவாங்தான் முதலாவது இராமன் என்ற மன்னராகி. இன்று தாய்லந்தை ஆளும் சக்ரி வம்சாவளியை உண்டாக்கினவர்.

பர்மியப் படையெடுப்பாளர்களால் தகர்த்தெறியப்பட்ட தாய்லாந்தின் கலையையும், கலாச்சாரத்தையும் உயிர்ப்பித்து, அந்த நாடு தற்போது அனுபவித்துவரும் செழிப்புக்குப் பாதை அமைத்தவர் முதலாம் இராமன் என்றும் புத்தயோத்ஃபா என்றும் அழைக்கப்படும் தாங் துவாங் எனப்படும் ஜெனரல் சேயோஃபியா சக்ரி என்பவர் ஆவர். அவர் பர்மியர்களால் செய்யப்பட்ட நாசத்திலிருந்து தாய்லாந்தின் நாகரிகத்தை மீண்டும் கட்டினர் என்றாலும் பொருந்தும்.

பர்மியர்களால் இடித்துத் தகர்க்கப்படும் வரையில் 417 ஆண்டுகள் தாய்லாந்தின் தலைநகராக இருந்த அயோத்தியாவில் முதலாம் இராமன் ஒரு சாதாரண அரசாங்க அதிகாரியின் மகனாகப் பிறந்தார். அயோத்தி வீழ்ச்சியின் போது முதலாம் இராமன் ராஜ்புரி மாநிலத்து ஆளுநரின் கீழ் ராணுவத்தில் பணியாற்றினர். அந்த ஆளுநர் ஜெனரல் தக்சின் பர்மியர்களை தென் தாய்லாந்தை விட்டு விரட்டித்தானே மன்னர் என்று பிரகடனம் செய்தார்.

ஜெனரல் தக்சின் மன்னரானதும், தாங்துவாங் (முதலாம் இராமன்) ராணுவத் தளபதியாகத் திக்விஜயம் செய்தார். இத் திக்விஜயத்தில் தாய்லாந்திற்கு வெற்றியையும், புகழையும் கொடுத்தார். வியன்டைன், லுவாங் பிரபாங் இரண்டையும் வெற்றிகொண்டு, மரகதப்புத்தர் சிலையை பாங்காக் கொண்டு வந்ததும் இவர்தான். கம்போடியாவில் துவாங் இருக்கும் போது தலைநகரில் மன்னருக்கெதிரான புரட்சி என்று விரைவாகத் தாய்நாடு திரும்பினர். அங்கே மக்கள் மகுடத்துடன் அவருக்காகக் காத்திருந்‌னர்.

எனவே 1782 ஏப்ரல் 6-ல் தளபதி சக்ரி தாய்லாந்து மன்னராக முடி சூட்டிக்கொண்டார். ஜூன் மாதத்தில் தோன்பூரியிலிருந்த தலைநகரை பாங்காக்கிற்கு மாற்றினர். தன் பெயரை புத்தயோத்ஃபா அல்லது முதலாம் இராமன் என்று அழைக்குமாறு செய்தார்.

தாய்லாந்தின் ராணுவ பலத்தைப் பெருக்கி, மக்களைப் படையெடுப்பாளரிடமிருந்து காத்து, தாய்லாந்தின் கலையையும், கலாச்சாரத்தையும் புத்துயிர் கொள்ளச்செய்து, தாய்லாந்திற்கு நீதிமுறை வழுவாத சட்டமமைத்து, பாங்காக் நகரை அழகுமிக்கதாகக் கட்டுவித்துத் தாய்லாந்து மக்கள் வாழையடி வாழையாக ஆனந்த வாழ்வுவாழ வைத்த தளபதி சேயோஃபியா சக்ரியை- முதலாம் இராமனை- அவர் முடியேற்றுக்கொண்ட 181-வது ஆண்டு விழாவை இவ்வாண்டு ஏப்ரல் 6-ந் திகதி இன்று தாய்லாந்து மக்கள் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிருர்கள். 1809 செப்டம்பர் 7-ல் காலமான அவர் 28 ஆண்டுகள் ஆட்சிசெலுத்தினர்.

## டாக்டர் தர்மலிங்கம் அறிக்கை

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் பத்து மாதங்களுக்கு முன்பாக யாழ்ப்பாண மாநகர சபை மேயர் பதவியை ஏற்ற போது நகரிலே நல்ல அபிவிருத்தி ஏற்படுமென்று பொதுமக்கள் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். உண்மையும் நேர்மையும் மிக்க அவரைப்போன்ற ஒருவர் மேயராக வந்ததால் ஊழல்கள் குறையுமென்றும் நம்பினர். சென்ற 10 மாதங்களில் சிற்சில அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளனதான். என்றாலும் தாம் விசேஷமாக எதையும் சாதிக்க முடியவில்லை என்று அவர் விடுத்துள்ள நீண்டதோர் அறிக்கையில் அவரே ஒப்புக்கொள்ளுகின்ருர்.

இதற்கு அவர் முக்கியமாக மூவர்மீது புகார் கூறுகின்ருர். தமது சக மெம்பர்களில் சிலரும், சில நிர்வாக அதிகாரிகளும், ஸ்தலஸ்தாபன சர்விஸ் கமிஷனும் ஒத்துழைத்து உதவவில்லை என்றும் கூறுகின்ருர். இப் புகாரில் வெகுதூரம் உண்மை இருக்க வேண்டும். இதே நிலைமை நீடிக்குமாயின், இந்த மாநகர சபைக்கும் இந்நகரிலுள்ள மக்களுக்கும் விமோசனம் ஏற்படுவது சந்தேகமே. அடுத்தபடியாக மேயர் பதவிக்கு யார் வருவதாயினும், அவரது உற்சாகத்தையும் நம்பிக்கையையும் இதுவெகுவாகக் குறைப்பதாக இருக்கும்.

ஸ்தலஸ்தாபன கமிஷன் மீது அவர் கூறியுள்ள புகார் பாரதூரமானது. பொறுப்பில்லாமல் அதிகாரத்தை மட்டும் அது வகிப்பதுடன் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதிலும், மாற்றுவதிலும் ஏதேச்சாதிகாரமாக நடந்து கொள்வதாகவும் தம்முடன் ஒத்துழைக்கவில்லை என்றும் கூறுகின்ருர். இந்தப்புகார் மிகமுக்கியமானதால், ஸ்தலஸ்தாபன கமிஷன் இதற்குச் சரியான சமாதானம் கூறக் கடமைப்பட்டுள்ளது. இலங்கை ஸ்தலஸ்தாபன சுயாட்சி வெற்றி பெற வேண்டுமாயின் ஸ்தலஸ்தாபன கமிஷனுக்கும், பல ஸ்தலஸ்தாபனங்களுக்கும் நல்லுறவும் பூரண ஒத்துழைப்பும் இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். திரு. தர்மலிங்கத்தின் அறிக்கையின்படி, இவ்வித ஒத்துழைப்பு சிறிதும் இல்லை என்றே தெரிகிறது. இவ்வித நிலையில் நகரில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்பட முடியாததில் வியப்பில்லை.

இருதரப்பினருக்கும் ஒத்துழைப்பு இல்லாததற்கு என்ன காரணம்? இக்காரணத்தை அறிந்து அவற்றை நீக்கக் கூடுமான முயற்சியைச் செய்தாலே இந்த அவலநிலை மாற முடியும். மாநகரசபையில் அரசியல்கட்சி வேற்றுமைகள் புகுந்துள்ளதால் மெம்பர்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லை. ஆதலால் நிர்வாக அதிகாரிகளுக்கும் ஸ்தலஸ்தாபன கமிஷனுக்கும் பொதுமக்களுக்கும்கூட இச்சபைமீது மதிப்பும் நம்பிக்கையும் இல்லாமற் போவதில் வியப்பில்லை. சிறப்பாக இங்கு மேயர் பதவி வகிப்பவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பு அதிகமுண்டு. ஆனல் போதிய அதிகாரமில்லை. எந்த மேயரும் நகருக்குக் கூடுமான நன்மை செய்ய வேண்டுமாயின், அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதும் கட்சி அரசியலிலிருந்து அப்பதவிகாலம் நீடிக்கும்வரையிலாவது அடியோடு விலகிவிட வேண்டும். அப்போதுதான் மற்ற எல்லா மெம்பர்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பூரணமாகப்பெறவும் தலைமை அரசாங்கத்திடமிருந்து கூடுமான உதவியைப் பெற்று நகர வாழ்க்கையை அபிவிருத்தி செய்யவும் முடியும்.

நகரின் "முடிசூடா மன்னரான" மேயர் எவ்வித கட்சி முதலிய பேதமின்றி எல்லா மக்களுக்கும் பொதுவானவர். ஸ்தலஸ்தாபனங்களிலேகூடுமானவரை அரசியல் கட்சிவேற்றுமைகளுக்கு இடமில்லாமல் இருப்பதே உத்தமம். இவ்வித முறையை டாக்டர் தர்மலிங்கம் கடைப்பிடித்திருப்பின், அவருக்கு எதிர்ப்புகள் குறைந்து ஒத்துழைப்பு அதிகமாக இருந்திருக்கக்கூடும். எப்படியும் இனிமேயர் பதவிக்கு வருபவருக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்குமாயின் எதிர்காலத்திலே யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் அபிவிருத்தி அடைய நிச்சயம் இடமுண்டு

# மானிப்பாய் பட்டினசபை மலசுத்தித் தொழிலாளர்

## தலைவரிடம் கோரிக்கைகள் சமர்ப்பித்தனர்

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் பட்டினசபை மலசுத்தித் தொழிலாளர்களின் பிரச்னைகள் சம்பந்தமாக இலங்கை பொதுத் தொழிலாளர் சங்க வடபகுதி கிளைச்சங்கக் காரியதரிசி திரு. அந்தோனி முருகனும், பொதுத்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிதிரு. எஸ். ராசையாவும் மானிப்பாய் பட்டின சபைத் தலைவர், திரு. சி. முத்துக்குமாரசாமியை சந்தித்தனர். பட்டின சபைத் தலைவர் தூதுக்குழுவினரின் கோரிக்கைகளை சபை உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து ஆவனசெய்வதாக உறுதியளித்தார். பட்டின சபைத்தலைவரிடம் தூதுக்குழுவினர் பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

மானிப்பாய் பட்டினசபை வழங்கும் வருட நன்கொடை 25 ரூபா இந்தியத் தொழிலாளிக்கும், 50 ரூபா உள்ளூர்த் தொழிலாளிககும் கொடுப்பது நீதியற்றது. எல்லோருக்கும், ஏனைய பட்டின சபைகளில் வழங்கப்படுவது போல 100 வழங்கப்பட வேண்டும்.

மலசுத்தித் தொழிலாளர்கள் காலை 6 மணியிலிருந்து பகல் 2 மணிவரை தொடர்ந்து 8 மணி நேர வேலை செய்ய வகை செய்தல்வேண்டும்.

அங்கு வசிக்கும் தொழிலாளர்களுக்குப் பட்டினசபை வாங்கிய பொதுக்கிணற்றில் தண்ணீர் அள்ள வசதி செய்தல்வேண்டும்.

மலசுத்தித் தொழிலாளர்கள் பட்டினசபை, சந்தை ஆகிய இடங்களைச் சுத்தம்செய்ய அனுமதிக்கக் கூடாது.

இதே வேளையில் தொழிலாளர் தம் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டும்.

இத்தூதுக்குழு இன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகரைச் சந்தித்து மலசுத்தித் தொழிலாளர்களின் நிலைமை பற்றி விளக்கவிருப்பதாகத் தெரிகிறது.

## லாவோசில் சண்டை நிறுத்தம்

வியன்டைன், ஏப். 5

மத்திய லாவோஸில் ஜார்ஸ் வெளியில் சென்ற சனிக்கிழமைமுதல் நடைபெற்ற சண்டையில் 20 பேர் வீரர்கள் மாண்டுபோனதாக லாவோஸ் பிரதமர் இளவரசர் சவன்ன பூமா தெரிவித்தார்.

இப்பொழுது அங்கு சண்டை நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த சண்டை நிறுத்தத்தை நிரந்தரமாக்குமாறு தாம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆஸ்பத்திரி கட்டடத்தில் 74 வெடிப்புகள்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் புதிய ஐந்து மாடிக் கட்டடத்தில் பல வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வெடிப்புகளை பழுதுபார்க்கும்படி ஆஸ்பத்திரி வட்டாரங்கள், மராமத்து இலாகாவிடம் கேட்டுள்ளன.

1954-ம் ஆண்டு கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு 1955-ம் ஆண்டில் கட்டடம் திறந்து வைக்கப்படுகிறது. இக்கட்டடத்தில் ஏழு பணம் அறவிடப்படாத வார்டுகளும், முதலாந்தர, இரண்டாந்தர பணம் அறவிடும் வார்டுகளும் உள்ளன. மழைகாலங்களில் இக்கட்டடத்தின் வராந்தையில் மழைத் தண்ணீர் வடிவதாகவும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலதடவை முறையிட்டுள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

நேற்று கொழும்பு 'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் முதல் பக்கச் செய்தியைக் கண்டதும் மகிழ்ச்சியாக இருந்தது. மொழிவிஷயமாக ஒரு சமரசம் ஏற்படுத்த ஒரு சர்வ கட்சி மகாநாட்டை, அரசாங்கம் கூட்டுவதாயின், தாங்கள் அத்துடன், ஒத்துழைக்கவும், அதை வெற்றிகரமாகச் செய்யவும் தயாரென்று நல்லூர் எம்.பி. நாகநாதன் வெளியிட்ட அறிக்கையைக் கொட்டை எழுத்துக்களில் முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது.

அத்துடன் தேசிய ஐக்கியத்தைப்பற்றி ஜி. ஜி. கூறிய யோசனையை ஆதரித்து டட்லி வெளியிட்ட அறிக்கையும் வெளியானதைப் பார்த்ததும், நாட்டுக்கு நல்லகாலம் வரலாம்போல் புதிய நம்பிக்கை ஏற்பட்டது.

* * *

இரு தலைவர்களின் இவ்விரு அறிக்கைகளும் மிக முக்கியமானதே. என்றாலும் 'டெயிலிநியூஸ்' பேப்பர் இதை இவ்வளவு முக்கியம்கொடுத்து வெளியிட்டது, அதைவிட விசேஷமானது. ஏன் தெரியுமா?

மொழிச்சட்டம் நிறைவேறி நாட்டில் எவ்வளவோ கலவரங்கள் ஏற்பட்டும், இதுவரையில், அந்தப் பத்திரிகை, தமிழர்களுக்கு மொழிவிஷயமாக நீதிசெய்ய வேண்டுமென்று ஒரு வார்த்தைதானும் தவறிக்கூட தலையங்கம் எழுதியதாகத் தெரியவில்லை. பார்லிமெண்டிலே பீரங்கிக் காவலுடன், இந்தச்சட்டம் நிறைவேறிய போதும், அதன்பிறகும்கூட இதுவரை இதுபற்றி அப்பத்திரிகை மௌனம் சாதித்து வருகின்றது. இப்போதும்கூட தமிழ்ப்பேசும் மக்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்று ஒரு வார்த்தையும் தலையங்கத்தில் அது கூறியதுண்டா? நாட்டின் ஒரு பெரிய பத்திரிகை ஸ்தாபனம், இவ்வித முக்கிய விஷயத்தில், தலைவர்களுக்கு வழிகாட்டவேண்டியிருக்க, அது விபரீத மௌனம்சாதித்துவருவதைப் பார்க்கிறோம்.

சென்ற கலகத்தின்போது, பத்திரிகை ஆசிரியர்களை, பெரிய பண்டாரநாயக்கா அழைத்துப் பேசியபோது, நாட்டில் வகுப்புவாதத்துக்கும், கலவரத்துக்கும் லேகஹவுஸ் பத்திரிகைகளே பல கூடாத செய்திகளை வெளியிட்டு தூபம் போடுவதாக, உணர்ச்சியுடன் கண்டித்தது எனக்கு ஞாபகம் வருகிறது.

* * *

அது எப்படியாயினும், இப்போதாவது மொழிசமரசத்துக்கான இச்செய்தியை அப்பத்திரிகை வெளியிட்டது பெரியகாரியம் தானே! இதற்காக அப்பத்திரிகையைப் பாராட்டுகிறேன். இதைத் தொடர்ந்து மொழி, வகுப்பு சமரசத்துக்காகவும், அரசியல் ஜனநாயக நீதிக்காகவும் அப்பத்திரிகை முன்வந்து, எழுதுமாயின், சிறுபான்மை சமூகங்களுக்கு மனிதநீதியும் உரிமையும் வழங்கவேண்டுமென்று வற்புறுத்துமாயின், அரசியல்வாதிகள் மனதிலே, நல்ல மாறுதல் ஏற்பட்டு நாட்டுக்கு நல்ல சேவை செய்வதாகும். ஜனநாயகம் வெற்றிகரமாக நடக்க, பேப்பர்கள்தானே காவலர்கள் போல் பார்த்துக்கொள்ள வேண்டும்!

* * *

திருக்கோணமலைக்குச் செல்லும் வழியிலே கன்யா வெந்நீர் ஊற்றுகளில் விடியற்காலை 5 மணிக்குச் சென்று ஸ்நானம் செய்தோம். அப்போதே அதிகமான கூட்டம். என்றாலும், விளக்கு வெளிச்சமில்லை. சுகாதார ஒழுங்குகளும் போதாது. இந்த அதிசயக கிணறுகள் மேல்நாடுகளில் இருப்பின், எவ்வளவுபிரமாதமாககப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

# நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முன்னின்று உழைக்க வேண்டும்

## ஸ்தாபகர் தினவிழாவில் உதவி வித்தியாதிபதி பேச்சு

மாவிட்டபுரம், வெள்ளி

"ஒருவர் தான் தனது நாட்டில் பிறக்கும்போது அந்நாடு இருந்த நிலையைவிட தான் இறக்கும்பொழுது முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய நிலைக்கு உழைக்க வேண்டும். இல்லாவிடில் அவருக்குப்பின் தோன்றும் பிற்சந்ததியினர் அவரைத் திட்டுவார்கள். எனவே நாட்டில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதில் முன்னின்று உழைத்துத் தன்னால் கூடியமட்டும் அப்பிரச்னைகளை தீர்க்க வேண்டும்."

இவ்வாறு கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை ஸ்தாபகர் திரு. ஆ. வேலுப்பிள்ளை தின விழாவில் தலைமையுரை நிகழ்த்திய வடபகுதி உதவிவித்தியாபகுதி திரு. சி. உ. சோமசேகரம் குறிப்பிட்டார். அவர் தனது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்கள் வருங்கால சந்ததியினர்; அவர்கள் கல்வி பயிலும் பாடசாலை ஒரு சமூகத்தின் பொக்கிஷம். எங்கள் பாடசாலைகள் யாவற்றையும் செயலாற்றலும் ஆத்மீகமும் நிறைந்த நிலையங்களாக வளர்க்க வேண்டும். பாடசாலைகளை இவ்விதம் வளர்ப்போமானால் எமது பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்து எமது வருங்கால சந்ததியினர் சிறப்புற வாழ வழிசெய்தவர்களாவோம்.

ஒரு சமூகத்தின் அங்கம் குடும்பமாகும். எனவே குடும்பத்தின் அடிப்படைத் தேவைகள் கட்டாயமாக நிவர்த்தி செய்யப்பட வேண்டியவை. பசியாக இருக்கும்போது எமது இலட்சியங்கள் யாவற்றையும் மறந்துவிடுகிறோம். எனவே உணவுக்கான வழியை எப்படியாகுதல் கண்டுபிடித்துவிடவேண்டியது அவசியம்

தெல்லிப்பழை கிராமசபை தலைவர் திரு. த. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

வருங்கால மாணவர்கள் அநேக எதிர்ப்புகளுக்கிடையே வாழ்கிறார்கள். உலகமெங்கும் பிற்போக்குச் சக்திகள் எம்மைச் சுற்றி உலவுகின்றன. இவற்றை எதிர்த்து வெற்றி காண்பது மாணவர்கள் கையில்தான் உண்டு. பழைய பண்பாட்டைப் புதுமையாக்குவதாகக் கூறுபவர்கள் எதுவித தயக்கமுமின்றி பழையகால மூடநம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள்.

இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. தியாகராசா பேசுகையில் மாணவர்களின் எதிர்காலத்தில் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும் என்று கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. ப. சிவானந்தையர் 91-வது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரு. வ. சரவணமுத்துவும் பேசினார்.

திரு. ஆ. வே. சிற்றம்பலம் நன்றி கூறினார்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## விரும்பிய மொழியில் விஞ்ஞானம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கம் விஞ்ஞான பாடத்தை ஆங்கிலத்தில் போதிக்க முடிவு செய்யவில்லையென்றும் எந்த மொழியில் விஞ்ஞானம் போதிக்கவேண்டுமென கல்லூரி அதிகாரிகள் கருதுகிறார்களோ அந்த மொழியில் அவர்கள் போதிக்கலாமெனவும் கல்வி மந்திரி தெரிவித்துள்ளார்.

## மீண்டும் மருந்துத் தட்டுப்பாடு

கொழும்பு, வெள்ளி

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மருந்துக் கலவைகள் எதுவுமில்லாமல் கஷ்டப்படுகின்றனர். இந்தக் கலவைகள் தயாரிக்கப்படுவதற்கு வேண்டிய உப்பு வகைகளுக்கு பொது மருந்து வைப்பு நிலையத்தில் போதக் குறை ஏற்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டில் உள்ள தனிப்பட்ட மருந்துச்சாலைகளில் இருந்து இந்த மருந்து வகைகளை வாங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகிறது. பொது மருந்து வைப்பு நிலையில் உள்ள மருந்து வகைகளையே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வதற்கு போதிய வசதிகள் இல்லை என ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர் ஒருவர் தெவித்தார்.

## 'உதவியை ஏற்றுக்கொள்ளுங்கள்'

கெலிஓயா, வெள்ளி

எந்த ஒரு வெளிநாடாவது எமக்கு உதவ முன் வந்தால் அந்த உதவியை நாம் ஏற்று நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென உடுனுவர எம். பி. ஜெயசுந்தரா உடுனுவரா தொகுதியிலுள்ள பமனுவாவில் கட்டப்பட்ட புதிய சனசமூக நிலைய மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. ஜெயசுந்தரா மேலும் பேசுகையில் இலங்கையில் அதிக அரசியல் கட்சிகள் இருப்பதாகவும் இவ்விதம் கட்சிகள் அதிகரித்தால் நாட்டின் முன்னேற்றம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மக்கள் ஐக்கியப்பட்டு நாட்டை அபிவிருத்தி செய்ய உழைக்கவேண்டும் என உடுனுவர எம். பி. கேட்டுக் கொண்டார்.

## சேரியில் 500 பேர் வீடு இழந்தனர்

கொழும்பு, வெள்ளி

மருதானை ரயில்வே யார்டுக்கு அருகிலுள்ள சேரி ஒழிக்கப்பட்டபோது ஆண், பெண், சிறுவர்கள் உட்பட சுமார் 500 பேர் நேற்று வீடிழந்தனர்.

டீசல் என்ஜின் சாரதிகள், மற்றும் ஊழியர்கள் உட்பட 300 பேர்களுக்கு போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜீ. கலுகல்ல கொடுத்திருந்த உறுதியின் படியே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சேரியில் வாழ்ந்து வந்தவர்கள் இந்த ரயில்வேயார்டில் வேலை செய்து வந்தவர்களை முன் ஒரு தடவை தாக்கியதைத் தொடர்ந்தே இவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென அவர்கள் மந்திரியைக் கோரியிருந்தார்கள்.

இந்த சேரி ஒழிப்புவேலையை மேற்கொள்ளுமாறு கொழும்பு மாநகரசபை மேயர் திரு. சுகததாஸா உத்தரவு பிறப்பித்திருந்தார்.

## தேர்த் திருவிழா

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கிறது. மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நிகழும்.

## ஐயாறன்

(4-ம்பக்கதொடர்ச்சி)

உலக யாத்திரீகர்களெல்லாம் அந்த இடத்தைத் தேடிக் கொண்டுவந்து பலநாள் தங்கி இருப்பார்களே! ஆனால் நமது இலங்கை அரசாங்கமோ, நாமும் எங்கும் செல்லவேண்டாம், பிறரும் இங்குவரவேண்டாம் என்ற கொள்கையைக் கைக்கொண்டு இலங்கையை ஒரு சிறைச்சாலையாக்கி வருகின்றது! இந்த நிலை எப்போதுதான் மாறுமோ! அந்தக் கோணேசர்தான் அருள்செய்ய வேண்டும்.

* * *

கல்வி ஞானக்கலைப்
பொருளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூர்
ஈசனை
எல்லியும் பகலும் மிசை
வானவா
சொல்லிடீர் துயரங்கள்
தீரவே.

— திருநாவுக்கரசர்.

## இந்தியாவுக்கு அடுத்த யு. எஸ். தூதர்

வாஷிங்டன், ஏப். 5

இந்தியாவுக்கு அடுத்த யு. எஸ். ஸ்தானிகராக செஸ்டர் பவுல்ஸ் நியமிக்கப்படுவார் என்பது ஊர்ஜிதமாகிவிட்டதாகத் தெரிகிறது. உத்தியோகபூர்வமான அறிவிப்பு இன்னும் ஒருவார காலத்தில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்குறுதியை மீற மாட்டோம்

### அண்ணா கருத்து

சென்னை, ஏப். 5

சீன ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதற்கான யுத்தமுயற்சியில் தி. மு. க. தனக்குரிய பங்கைச் செய்யும் என்று நாம் கொடுத்த வாக்குறுதியில் இருந்து ஒருக்காலும் மாற மாட்டோம் என்று திரு. சி. என். அண்ணாதுரை தெரிவித்தார்.

நெருக்கடியான காலத்தில் எல்லா அரசியல் வேற்றுமைகளையும் மறந்து ஐக்கியமாக வேலை செய்ய வேண்டும் என்றும் ஆனால் தி. மு. க அப்படிச் செய்ய வில்லை என்றும் சில காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதனைப் பற்றயும் திரு. அண்ணாத்துரை குறிப்பிட்டார். இது தப்பெண்ணத்தினால் கூறப்படும் அபிப்பிராயம் என்றார் அவர்.

'ஆளும் கட்சியினருக்குவிரோதமாக தி.மு.க. மக்களைத் தூண்டி விடாது. யுத்த முயற்சிக்குப் பாதகமான காரியங்களைச் செய்யாது. ஆனால் ஆளும் கட்சியினருடைய சில கொள்கைகள் பொது நலன்களைப் பாதிக்குமென்று நாம் கருதினால் தான் அதை நாம் எதிர்க்க வேண்டும். அதுதான் ஜனநாயகம். பேச்சு சுதந்திரத்தை யாரும் ஆட்சேபிக்க முடியாது' என்றும் அவர் கூறினார்.

## 'இரும்புத் தொப்பிகள் அணிய வேண்டும்'

கொழும்பு, வெள்ளி

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செல்பவர்களும் அதன் பின்னாசனத்தில் இருந்து செல்பவர்களும் இரும்புத் தொப்பிகளை அணிந்துசெல்ல கோரப்படவேண்டுமென்றும், இவ்விதம் செய்வதால் விபத்துக்களால் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்கலாமென்றும் இலாகாக்களுக்குள் இயங்கும் விபத்து தடுப்பு கமிட்டி அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளது.

இந்த இரும்புத் தொப்பிகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துமாறும் கமிட்டி நிதியமைச்சரிடம் கோரியிருந்ததற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்தே கமிட்டி மேற்படி ஆலோசனை தெரிவித்துள்ளது.

# "இசையினால் இறைவனை அடையலாம்"

## அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற இசைவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

'இசையால் இறைவனை அடையலாம். மனித உள்ளங்களை உருக்கி ஆன்மீக நெறிக்கு வழிநடத்திச் செல்லும் ஆற்றல் இசைக்கலைக்கு உண்டு' என்று உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் கடந்த வியாழக்கிழமை இரவு அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற தமிழிசைப் பெருவிழாவில் ஆசியுரை வழங்குகையில் கூறினார்.

நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் தமிழிசைப்பெருவிழா ஆரம்பமாகியது. ஞாயிற்றுக்கிழமை வரை இசை விழா தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

திரு சோமசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்களின் அரிய செல்வங்களுள் இசைக்கலையும் ஒன்று. இசையால் இறைவனை அடைய முடியும் என்பதனை நமது முன்னோர்கள் நிலைநாட்டியுள்ளனர். உள்ளம் தூய்மை பெறச் செய்து அதனால் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு இசை வழிகாட்டுகிறது. கலைஞர்கள் இசை வளர்ச்சியில் சிரத்தை எடுக்கவேண்டும். இசை விழாக்களினால் இசைக்கலை வளர முடியும்.

பல கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும்நடைபெற்றன.

இசை விழா நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

இன்றிரவு டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறார். திரு. கே. பி. ஹரன் இன்றைய விழாவிற்குத் தலைமை வகிக்கிறார். இன்றைய நிகழ்ச்சிகள் திரு. என். ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதசுரக்கச்சேரியுடன் ஆரம்பமாகின்றன. திருவாளர்கள் ஏ. கனகசபை, வே. தம்பிராசா, பொ. கந்தசாமி' எஸ். தியாகராசா, சு. சத்தியலிங்கம், ஏ. நடராசா, ப. முத்துக்குமாரசாமி, ஆகியோரினதும் சதுமலை சகோதரிகளினதும் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறவிருக்கின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் இசை விழா இறுதிநாள் நிகழ்ச்சிகள் நடைபெறும் இசைவல்லார் எஸ். செல்லத்துரைக்குப் பொன்னாடை போர்த்தி நிதி வழங்குவதோடு காலஞ் சென்ற நாதசுரவித்துவான் திரு. எஸ். பி. எம். திருநாவுக்கரசு குடும்பத்தினருக்கு நிதி வழங்கப்படவிருக்கிறது

திரு. எஸ். சின்னராசா குழுவினரின் நாதசுரக்கச்சேரியுடன் விழா ஆரம்பமாகும். திருவாளர்கள் வி. நடேசன், தா. இராசலிங்கம், எஸ். செல்லத்துரை, செல்விகள் செ. அபிராமி தேனுகா, க. பேரின்பவல்லி, சண்டிருப்பாய் சகோதரிகள், திருமதி பூமணி இராஜரத்தினம் ஆகியோரின் பாட்டுக்கச்சேரிகளும், திரு. மூர்த்தி ஐயரின் புல்லாங்குழல் கச்சேரியும் நடைபெற விருக்கிறது.

# கார்-பஸ் மோதலில் சாராயம் வெளியேவந்தது

## ரூ. 10,000 பெறுமதியான மதுவகை கைப்பற்றப்பட்டது; மூவர் தலைமறைவு

சித்தூர், ஏப். 5

ஒரு பஸ்வண்டியுடன் ஒரு கார் மோதியது. இதனால் ஏராளமான கள்ளச் சாராயத்தைக் கைப்பற்ற முடிந்தது. இச்சம்பவம் சித்தூரில் நிகழ்ந்துள்ளது.

கள்ளச்சாராயம் ஏற்றப்பட்ட ஒரு கார் தற்செயலாக ஒரு பஸ் வண்டியுடன் மோதியது. காரில் இருந்த மதுப் புட்டிகள் கைப்பற்றப்பட்டன. உடனே பொலிசார் ஸ்தலத்திற்கு வந்துவிட்டனர். சுமார் ரூ. 10,000 பெறுமதியான பிராந்தி, விஸ்கி கைப்பற்றப்பட்டது.

இந்த சீமைச் சாராயப் புட்டிகள் இருந்த கார் புதுவையிலிருந்து வந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அது பஸ்வண்டியுடன் மோதியதால் அதன் சாராயம் வெளுத்துவிட்டது.

டிரைவர் உள்ளிட்டு காரில் இருந்த 3 பேர் காரை ஸ்தலத்தில் விட்டுவிட்டு ஓடிவிட்டதாகப் பொலிசார் கூறுகின்றனர். அந்த மூன்று பேரும் இன்னும் அகப்படவில்லை. இன்ஸபெக்டர் தலைமையில் சென்ற பொலிசார் கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றினர்.

கள்ளச்சாராயத்தைக் காரில் கடத்தி வந்து தப்பியோடிய 3 பேரையும் பொலிசார் தேடி வருகின்றனர்,

## பாதுகாப்புக்கு ரூ. 900 கோடி

புதுடில்லி, ஏப். 5

இந்தியா நடப்பு ஆண்டில் பாதுகாப்புச் செலவுக்கு ரூ 900 கோடி செலவழிக்கும்.

## வேலைநீக்கத்துக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபைத் தொழிலாளி திரு. சிங்கம் என்பவர் மாசிமாதத்திலிருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதனை இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கம் ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகிறது.

இலங்கைப் பொதுத்தொழிலாளர் சங்கம் இவ்விஷயத்தை உள்ளூராட்சி ஆணையாளருக்கும், உதவி ஆணையாளருக்கும், தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

திங்கட்கிழமை இச்சங்கத்தின் தூது கோஷ்டி மாநகர சபைக் கமிஷனர் திரு. டி. ஜெயசிங்காவைச் சந்தித்து நிலைமையை விளக்க விருப்பதாகவும் அறியவருகிறது.

## ரஷ்ய—இந்திய வர்த்தகம்

புதுடில்லி, ஏப்.5

அடுத்த 3 ஆண்டுகளில் ரஷ்ய-இந்திய வர்த்தகம் இரட்டிப்பாகும் எனக் கூறப்படுகிறது. இந்தியாவின் ஏற்றுமதி 50 கோடிருபாயிலிருந்து 100 கோடியாக உயரும் என்றும், இறக்குமதியும் 100 கோடியாகும் என்றும் அறிவிக்கப் படுகிறது.

## இதுவரை 243 கோடி டாலர்

புதுடில்லி, ஏப். 5

இந்தியாவுக்கு இதுவரை அமெரிக்கா 243 கோடி டாலர் அளித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

# "திடீர் மாற்றங்களினால் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது"

## யாழ்ப்பாணம் தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

"நாட்டுக்கேற்ற கல்விமுறை வகுக்கப்படுவதற்கு முன்னதாகவே ஆசிரியர்கள் திடீர் திடீரென மாற்றப்படுவது வருந்தத்தக்கது. ஆசிரியர்களைத் திடீரென்று மாற்றுவதினால் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்படும். இந்த நிலைமை மிகவும் வருத்தமான செய்கையாகும்" என்று யாழ்ப்பாணத் தமிழாசிரிய சங்கச் கூட்டத்தில் வட இலங்கை தமிழாசிரியர் சங்க செயலாளர் பண்டிதர் பொன்னுத்துரை பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குச் சங்க உபதலைவர் திருமதி பொன்னம்பலம் தலைமை வகித்தார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன:-

1-6-63-ல் நடைபெறவிருக்கும் பெருந்தொகையான மாற்றங்களைக் கீழ்வரும் காரணங்களைக் கொண்டு எதிர்க்கவேண்டுமென எமது தாய்ச்சங்கத்தின உதவிகொண்டு கேட்டுக்கொள்கின்றோம்.

"குறிப்பிட்ட மாற்றம், வருட நடுவில்—தவணை மத்தியில்—நிகழவிருப்பதால் கல்வித் திட்டங்கள் யாவும் சிதறடிக்கப்படுகின்றன. மேல் வகுப்புகளின் கல்வித்தரம் இதன்மூலம் முற்றாகப் பாதிக்கப்படும். நாமும் எமது தாய்ச் சங்கமும் நீண்ட நாட்கள் வலியுறுத்திவந்த மாற்றத் திட்டங்களுக்கு மாறாக நடைபெறவிருப்பது பாடசாலைகள் தரம் பிரித்தல் ஆசிரியர் நியமனம் ஊர்ஜிதப்படுத்தல் போன்ற கருமங்கள் ஒன்றும் ஆரம்பமாவதற்கு முன்பே மாற்றங்களில் கைவைப்பது. பொதுவான முதுமுறை அட்டவணையொன்று தயாரிக்கப்படாமல் அரசினர் ஆசிரியரையும் எம்மையும் கலந்து மாற்ற நினைப்பது.

எமது பாடசாலையிலிருக்கும் தலைமை, சிரேஷ்ட உதவியாசிரியர் இடங்களை நிரப்பாமல் கலந்து மாற்ற நினைப்பது."

இக்கோரிக்கைகளை உடனடியாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இச்சங்கம் மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறது.

## சீனாவிலிருந்து லாவோசுக்கு புது ரோடு

வியன்டைன் ஏப்ரல் 4

சீனாவிலிருந்து லாவோஸ் நாட்டில் உள்ள நாம்தா பகுதிக்கு புது ரோடு அமைப்பதாக இங்கு அமெரிக்க செய்தி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்ட விஷயமறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

சீனாவிலிருந்து லாவோசுக்கு ஏற்கனவே ஒரு ரோடு உள்ளது. இது முன்பிருந்து லாவோஸ் சர்க்காருக்கும், சீன சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இந்த ரோடு சீன என்ஜினியர்களால் அமைக்கப்பட்டது. அது சீனாவில் யூனான் மாகாணத்தில் உள்ள மேங்லா என்ற இடத்தையும் லாவோசில் நடுநிலைமையாளரின் ஆதிக்கத்தில் உள்ள போங்சாலி என்ற இடத்தையும் இணைக்கிறது.

## ஸ்தலஸ்தாபன திருத்த மசோதா

கொழும்பு, வியாழன்

ஸ்தலஸ்தாபன ஊழியர்களில் குறிப்பிட்ட சிலருக்கு அளிக்கப்படும் பென்ஷன்களை அதிகரிக்கும் திருத்த மசோதா ஒன்றை ஸ்தலஸ்தாபன மந்திரியின் சார்பாக நிதிமந்திரி இன்று பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். அதிகரிக்கப்பட்ட பென்ஷன் தொகை 1957 அக்டோபர் முதல் திகதி முதல் அமுலுக்குவரும்.

## கடின உபகரண தொழிற்சாலை

கொழும்பு, வியாழன்

117 லட்சம் ரூபா மூலதனத்துடன் கடின உபகாரக் கார்ப்பரேஷன் ஒன்றை நிறுவுவதற்கு கைத்தொழில்மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா விரைவில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவிருக்கிறார். இந்தப்புதிய கார்ப்பரேஷனில், பி. டி. றபாலா, திரு சி. வி. அபயசேகரா, திரு. எம். குல்சிங்கா, என்ஜினியர் ஜி. ஜி. செனிவிரத்ன, திறைசேரிப் பிரதிநிதி திரு. எச். பண்டிக குணவத்தன ஆகிய ஐந்து பேரும் அங்கம் வகிப்பார்கள். கார்ப்பரேஷனின் கடின உபகரண தொழிற்சாலை அடுத்த ஆண்டு உற்பத்தி வேலை ஆரம்பிக்கும்.

மண்வெட்டி, கோடரி, ஏர், கத்தி, கரண்டி, கை ஆயுதங்கள் போன்ற பல கடின உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு வருடாவருடம் 100 லட்சம் ரூபாவிற்கு மேல் செலவிடப்படுகிறது. கடின உபகாரண தொழிற்சாலை முழு சக்தியுடன் இயங்குமானால் நாட்டின் தேவையில் 50-75 சத விகிதமான உபகரணங்களை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுறது. இதனால் வெளிநாட்டுச் செலாவணியில் 50 லட்சம் ரூபா மிச்சப்படுத்தப்படுவதுடன் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

## இரகசிய பொலிஸ் பகுதி புதியஅதிபர்

கொழும்பு, வெள்ளி

பொலிஸ் இலாகாவில், இரகசிய பொலிஸ் விசேஷ பகுதி சுடரீண்டன்டாகக் கடமையாற்றிய திரு. ஜே. டபிள்யு. எல். அட்டிக்கலை இரகசியப் பொலிஸ் பகுதிக்கும் மத்திய பொலிஸ் பகுதிக்குமான உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பொதுச் சேவைக் கமிஷனால் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அபயக்கூன் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் திரு. அட்டிக்கலையின் பதவி உயர்வுக்கு சிபார்சு செய்திருந்தார்.

சப் இன்ஸ்பெக்டராகப் பொலிஸ் சேவையில் சேர்ந்த திரு. அட்டிகலை கொலை சம்பந்தமாகப் பயிற்சிபெற்றுப் பின்னர் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், அதன் பின்னர் பொலிஸ் சுப்ரீண்டன்டாகவும் கடமையாற்றியுள்ளார்.

## ஹியூம் பிரபு பிரயாணம்

டோக்கியோ, ஏப். 5

ஜப்பானில் 9 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபு நேற்று லண்டனுக்குப் பிரயாணமானார்.

## தங்கம் திருடிய ரஷ்யர்கள் சுடப்படுவர்

லண்டன், ஏப்ரல் 5

திருடப்பெற்றதங்கம், மணிக்கல் ஆகியவற்றை விற்பனை செய்த ஆறு ரஷ்யர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

சைபீரிய, யூரல் சுரங்கங்களில் பெருவாரியாகப் பெருகிப்போன தங்கத் திருட்டுகளை ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன் கடுமையான மேற்படி தண்டனையை சோவியத நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

இக்குற்றங்களுக்காக 68பேர் இரண்டு மாதங்கள் விசாரிக்கப்பட்ட பின்னர், இவர்களில் பலருக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனையும் கிடைத்தது.

யூரல், மகதான் பகுதி, வடகிழக்கு சைபீரியா ஆகிய பகுதிகளில் உள்ள சுரங்கங்களிலிருந்து ரூ. 43 லட்சம் மதிப்புள்ள தங்கமும், விலை மதிப்பற்ற மாணிக்கம், பிளேட்டினம் ஆகியனவும் களவுபோயிருக்கின்றன. குற்றவாளிகள் திருடப்பட்ட தங்கத்தையும், மற்றவற்றையும் கூட்டுக்கள்ளருடன்சேர்ந்துகொண்டு ரஷ்யா முழுக்கவும், பால்டிக நாடுகளிலும விற்றனர் என்று சொல்லப்படுகிறது.

கள்ள நோட்டு அச்சடித்து வெளியிடுவது, தங்கத்தில் வாணிபச் சூதாட்ட வேலைகள் ஆகிய குற்றங்களுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனைச் செய்திகளைச் சோவியத் பத்திரிகைகள் நிறைய இடங்கொடுத்து வெளியிட்டன.

கட்டாய வேலை முறை முன்னர் ஸ்டாலின் காலத்தில் சுரங்கங்களிலிருந்து மறைந்து, தன்னிச்சையாகத் தொழிலாளர் அங்கு வேலைசெயது வருவது தங்கத்தில் கள்ள வாணிபம் நடக்க ஏதுவாக இருக்கிறது. தங்கத்திருட்டில் சுரங்கத் தொழிலாளிக்கு மட்டும் பங்கில்லை. சைபூரியாவிலுள்ள ஒரு சுரங்கத்தில் ஒரு போர்மனும், இரு காஷ்யர்களும், 'திட்டமிட்டுத் திருடி, வந்திருக்கின்றனர் சீன எல்லையை ஒட்டியுள்ள ஆமூர் பகுதிச் சுரங்கத்தில் நம்பகமான பல சுரங்க அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகத்தைக் கவனித்து வந்த அரசாங்கக் கட்டுப்பாட்டு அதிகாரியும் இத்திருட்டில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

## 'வித்தியாலயங்களின் சேவை'

### சேர் கந்தையா நம்பிக்கை

திருக்கேதீச்சரம், வெள்ளி

"ஆசிரியர்களின் கடமையுணர்ச்சியும் பெற்றோரின் ஒத்துழைப்பும் இணைந்து செயலாற்றுவதன் மூலமே பாடசாலையின் வளர்ச்சி தங்கு தடையின்றிச் செல்லமுடியும். ஒரு விழாசிறப்புப் பெறுவதற்கு வேலைக்கிரமம், தன்னம்பிக்கை, உண்மையான கரிசனை என்பன துணைசெய்யும்" என்று சேர் கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சரம் கௌரி அம்பாள் வித்தியாலயப் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

திருக்கேதீச்சரர் திருஞான சம்பந்தர் மடத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

சேர் கந்தையா வைத்தியநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'வேண்டுவார் வேண்டுவனையும் எம்பெருமான் அருள் அனைவர்க்கும் கிடைக்கும்' எங்கள் சமூகத்தில் போட்டியில்லை, விதண்டாவாதம் இல்லை. சம்பம் என்ற ஒரே இலட்சியத்தில் சேவைசெய்வதேயன்றி வேறில்லை. குறுகிய மனப்பான்மையும் எமக்கில்லை. வருங்காலச் சந்ததியினர் வளம் பெற்றோங்க வித்தியாலயங்கள்தான் அரும்பெரும் சேவை செய்யமுடியும்.

திருவாளர்கள் அ. பவழத்துரை, க. தி. ராஜா, சி. நடராஜா, திருமதி செ. தியானதேவி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

தலைமை ஆசிரியர் திரு. த. யோகநாதன் தமது அறிக்கையில் வித்தியாலய வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்.

திருமதி வைத்தியநாதன் பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திரு. சி. சேதுபதி அனைவர்க்கும் நன்றி கூறினார்.

# 'நமது கலைஞர்களை நாம்போற்றவேண்டும்'

## நாடக நூல் வெளியீட்டுவிழாவில் கலையரசு உரை

யாழ்ப்பாணம், வெள்ளி

"நமது கலைஞரை நாம் போற்றிக் கௌரவிக்க வேண்டும். நாம் அவர்களைப் பாராட்டி ஊக்கம் கொடுத்தால்தான் நமது கலைகள் நன்கு வளரும்" என கலையரசு சொர்ணலிங்கம் வைத்தீஸ்வரவித்தியாலய வெளிஅரங்கில் நடைபெற்ற 'தென்னவன் பிரமராயன்' என்ற 'தேவனின்' நாடக நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

கலையரசு மேலும் பேசுகையில், கலைஞரும் ரசிகர்களும் ஒன்றாக சேர்ந்தால்தான் கலை வளரும் என்றும் இருசாராருக்குமிடையில் நெருங்கிய தொடர்பும் நல்லுறவும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

திரு வி. சரவணபவன் 'தென்னவன் பிரமராயனின்' பிரதி ஒன்றை கலையரசு சொர்ணலிங்கத்திடம் வழங்கி வெளியீட்டை ஆரம்பித்தார்.

அவ்வெளியீட்டின் போது திரு. இராஜ அரியரத்தினம் அனுப்பியிருந்த ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது. திரு. இராஜ அரியரத்தினம் தமது ஆசிச் செய்தியில் தமிழிலே நாடக நூல்கள் மிகக் குறைவு என்றும் திரு. தேவன் இத்துறைக்கு நன்கு உதவியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் பேசுகையில், சமய நூலொன்றை நாடகமாக்குவது கஷ்டமானதொரு காரியம் என்றும் இந்த விஷயத்தில் துணிந்து முயற்சி செய்த திரு. தேவனைப் பாராட்ட வேண்டுமென்றும் கூறினார்.

திரு. ஏ. டி. பொன்னுத்துரை தமது உரையில் நாடக நடிகரொருவரால் எழுதப்பட்ட நாடகம் என்பதால் அது நல்ல நாடகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை என்றார்.

திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் பேசுகையில், திருவிழா, பாராட்டுவிழா ஆகிய விழாக்கள் கொண்டாடுவது தமிழரின் வாழ்வில் ஊறிப் போனதொன்று எனவும் கலைஞர்களைப் பாராட்டுவதால் கலைகள் வளர வழிசெய்வதாக இருக்குமென்றும் சமயகுரவர்கள் சமயத்துக்குச் செய்த தொண்டைப் போல் திரு. தேவனும் சமய அடிப்படையில் நாடகத்தை எழுதி சமயத்துக்குத் தொண்டு புரிந்துள்ளார் என்றார்.

செல்வி புஷ்பா செல்வநாயகம், தேவனின் நாடகத்தில் நாடகத்துக்கேற்ற நல்ல பண்புகள் இருப்பதாகவும் தமிழ் மொழியில் இயலும் இசையும் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் நாடகம் இன்னும் வளர்ச்சி அடையவேண்டுமென்றும் கூறினார்.

திரு. வி. சிவராஜசிங்கம் தமது உரையில், கூறியதாவது: மாணவ உலகத்துக்கு ஏற்றதொரு நல்ல நாடகம் 'தென்னவன் பிரமராயன்'. சமயத்தில் பற்றுக் கொண்டு வாழ்வைச் சீராக்க இத்தகைய முறையில் எழுதப்பட்ட நல்ல நாடகங்கள் பெரிதும் உதவும்.

திரு தேவன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

ஒரு நூலை நன்கு ஆராய்ந்து அறிந்து எழுதுவதே நூலின் தரம் உயர்வதற்கு உதவியாக இருக்கும். 'தென்னவன் பிரமராயன்' என்ற இந்த நாடக நூலை பத்துப் பதினைந்து வருடங்கள் சிந்தனை செய்தே எழுதினேன்.

நாடகத்தில் நவீன தந்திரங்கள் கையாளப்பட்டால் அது மெருகுறும். கலைப்பணிக்குத் தொண்டு புரிந்துவரும் வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகனுக்குத் தாம் பெரிதும் கடமைப்பட்டிருப்பதாகவும் திரு. தேவன் தமது நன்றியுரையில் குறிப்பிட்டார்.

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை குருவிளையாட்டுக் கழகத்தின் 5-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி புதுவருட தினத்தன்று நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் வீரர் ஆனந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றியீட்டுபவர்களுக்குப் பரிசுகளை வழங்கவிருக்கிறார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்திலுள்ள விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றக்கூடியதாக அஞ்சலோட்டப் போட்டி ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. இந்த உற்சவ நாட்களில் ஆலய மண்டபத்தில் ஆசிரியர் வி. க. ஆறுமுகம் தொடர்ச்சியாகக் கதாபிரசங்கம் நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது. 13-ம் திகதி சனிக்கிழமை திரு. ஆறுமுகம் கௌரவிக்கப்படுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

## ஆனந்தனுக்கு பொன்னாடை

புங்குடுதீவு, வெள்ளி

நீச்சல்வீரர் ஆனந்தனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவமளிக்க புங்குடுதீவு இளந்தென்றல் நாடகமன்றம் முடிவுசெய்துள்ளது. புதுவருட தினத்தன்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் இப்பாராட்டு வைபவம் நடைபெறவிருக்கிறது. 'பாசம் தந்தபரிசு' என்ற நாடகமும் அரங்கேற்றப்படவிருக்கிறது.

## விஞ்ஞான பட்டதாரிகள் பற்ருக்குறை

கொழும்பு, வியாழன்

விஞ்ஞான பாடங்களை சிங்களத்தில் போதிப்பதற்கு, போதியளவு விஞ்ஞான பட்டதாரிகள் இல்லையென்றும் தற்பொழுது 220 விஞ்ஞான பட்டதாரிகள் தேவைப்படுகிறார்கள் என்றும் கல்வி மந்திரி திரு. பதியுதீன் மஹமூத் தெரிவித்துள்ளார்.

## பாராட்டுச் செய்தி

வேலணை, வியாழன்

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் ஆனந்தனைப் பாராட்டி தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் பின்வரும் பாராட்டுச் செய்தியை அனுப்பியுள்ளது.

"ஆழியலை சூழ்ந்த ஈழத்திருநாட்டின் தவப்புதல்வரே, உமது வெற்றி கேட்டு ஈழத் தமிழினமே பெருமகிழ்ச்சி கொள்கிறது. உங்கள் வெற்றி, இளைஞர்களின் வெற்றி. எதிர்காலத்தில் தாங்கள் மேலும் பல சாதனைகளைச் செய்து ஈழத் தமிழினத்தின் பெருமையை உலகெங்கும் என்றும் விளங்கச் செய்வீராக."

## கிராமசேவகர்

வேலணை, வியாழன்

கொழும்பு பெரிய. தபாற் கந்தோரில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. எஸ். கனகலிங்கம் காரைநகர் மேற்குப் பகுதிக்கு கிராமசேவையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.




குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸல்லை ஆவலோடு எதிர்நோக்குகிருர்கள். ஸல்லுக்குள்ள பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.

ஸல்லைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதாரண மோல்டட், பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

ஸல்—குடும்பத்தார் உடன் விரும்புவது

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 6-4-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கே. பாக்கியராஜா — வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 ராம் குமாரசாமி — பாட்டு.

### ஞாயிறு 7-4-63

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-30 திரை இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு. 5-45 திரைக்குரல், 6-10 சூரவளை, 6-15 கோவில் அஞ்சல், 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 ஆர். மனேன்மணி — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'யார் தியாகி'— நாடகம், 9-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

### சனி 6-4-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திச்குறிப்புகள், 7-35 சேத்தூர் சுந்தரேசபட்டர் — வயலின், 8-15 கம்பன் திருநாள் (காரைக்குடி அஞ்சல்).

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 சேத்தூர் சுந்தரேசபட்டர் — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'ராஜகிரி'— இசை நாடகம், 8-15 திரைப்பட இசை, 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-15 இசைக் கோவை, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

### ஞாயிறு 7-4-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 கம்பராமாயணப் பாடல்கள், 8-15 லலிதா சேஷாத்திரி — பாட்டு, 9-15 கம்பன் திருநாள் (காரைக்குடி அஞ்சல்).

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சி. எஸ். ஜயராமன் — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டு முரசே — சித்திரம், 7-45 ராமநாதபுரம் எம். என். கணேசபிள்ளை — வயலின், 8-45 நாகஸ்வரம், 9-15 தேசபக்திப் பாடல்கள்.

## 'இடம் எங்கே?' பார்லிமெண்டில் கேள்வி

கொழும்பு, வியாழன்

இலங்கையர்களின் பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டு, பின்னர் இடமிருந்தால் தான் இலங்கையரல்லாதவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் இடம் அளிக்கப்பட வேண்டுமென கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் கல்வி இலாகாவுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை பற்றி நியமன அங்கத்தவர் திரு. எஸ். தொண்டமான் நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் குறிப்பிட்டுப் பேசுகையில், இவ்விதம் காலிஸ்தானங்கள் இல்லாவிடில் இலங்கையரல்லாதவர்களின் பிள்ளைகள் கல்வியற்று இருக்க வேண்டியதுதானே எனக் கேட்டார்.

வேறு இடங்களில் அவர்களை அனுமதிக்கவேண்டும் என கல்வி மந்திரி கூறியபோது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. எட்மண்ட் சமரக்கொடி எங்கே என்று கேள்வியொன்றை விடுத்தார்.

இதைத்தொடர்ந்து 'எங்கே எங்கே எங்கே' என்ற எதிர்க்கட்சிகளின் கோஷ்டிகானம் கிழம்பியது.

சபாநாயகர் ஒழுங்கை நிலைநாட்டுமாறு கோரினர்.

## கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

கந்தரோடை, வெள்ளி

கந்தரோடை சனசமூக நிலையம் வடமாகாண கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக்கிண்ணத்திற்காக இக்கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படுகிறது.

இம் மாதம் 28-ம் திகதி சுற்றுப்போட்டி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்ப வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. போட்டி அகில இலங்கை கைப்பந்தாட்டசம்மேளன விதிகளுக்கமைய நடைபெற விருக்கிறது.

## 'முற்போக்கு கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம்'

கண்டி, வெள்ளி

'சென்ற பொதுத் தேர்தலில் முற்போக்கு வாதிக்கட்சிகளிடையே நிலவிவந்த ஒற்றுமை முறிவடைந்தால் 1958-ம் வருடம் இடம் பெற்ற சம்பவம் மீண்டும் நடைபெற அது வழி வகுத்து விடும். இவ்வித சந்தர்ப்பம் பிற்போக்கு வாதிகளுக்கு வாய்ப்பை அளித்து விடும்.'

இவ்வாறு உணவு, வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின இங்கு கூட்டுறவு அச்சகம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

திரு. இலங்கரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் நான் குறிப்பிட்ட சில கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றேன். அது எல்லோருக்கும் சம உரிமை கொடுப்பதே.'

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம்

# முற்றிலும் திருத்தி அமைக்க அமைச்சர் உத்தரவு

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவுமொதத விற்பனை ஸ்தாபனத்தை முற்றிலும் புதிதாகத் திருத்தி அமைக்கும்படி உணவுவர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன உத்தரவிட்டுள்ளார். கூட்டுறவுமொத்த ஸ்தாபனத்தில் மோசடிகள் நடைபெற்றதாக பார்லிமெண்டில் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்தே அமைச்சர் இவ்விதம் உத்தரவு பிறப்பித்துள்ளார். துணி சம்பந்தமாகவும், டின் மீன் சம்பந்தமாகவும் கூறப்படும் மோசடி பற்றி விசாரணை நடத்துமாறு உணவுவர்த்தக அமைச்சின் பதில் நிரந்தரக் காரியதரிசி திரு. டபிள்யு. டி. சில்வாவிற்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த குறிப்பிட்ட மோசடியைத்தொடர்ந்து எட்டு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய உத்தியோகஸ்தர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இனிமேல் மோசடிகள், களவுகள் போன்ற சட்டத்துக்கு மாறான செயல்கள் பற்றி தகவல்கள் கிடைத்த உடனேயே விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இச் சந்தர்ப்பத்தில் திரு. இலங்கரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் பதில் ஜெனரல் மனேஜர் திரு. ஆர். என். குணரத்ன அவருடைய முன்னைய பதவியான உதவி ஜெனரல் மனேஜராக பதவி இறக்கம் செய்யப்படடுள்ளார். இவர் கிழக்கு ஜெர்மனியில் வர்த்தக கண்காட்சி ஒன்றில் கலந்துவிட்டு அண்மையில் தான் தயாகம் திரும்பியிருந்தார். இவர் வெளிநாடு சென்றிருந்தபோது, உணவுவர்த்தக அமைச்சின் உதவிக்காரியதரிசி திரு. ஆர். பி. எம். சேனநாயக்கா ஜெனரல் மனேஜராகப் பதவி வகித்து வந்தார். திரு. சேனாயக்காவே தொடர்ந்து ஜெனரல் மனேஜராகப் பணியாற்றுவார்.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

வடபகுதி அசைஸ்விசாரணை

# முல்லைத்தீவு கொலை வழக்கில்எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நேற்றுக் காலை விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட முல்லைத்தீவு கொலை வழக்கில நீதியரசர் திரு. பி. ஸ்ரீசங்கராஜா எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுப்பர் வேலுப்பிள்ளை என்பவர் 1961-ம ஆண்டு மே மாதம் 30-ம் திகதி முள்ளியவளையில் ஆறுமுகம் தாமு என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் திரு. கே. வி. எஸ். சண்முநாதன் திரு. பி. வி. சேனதிராஜாவின் உதவியுடன் ஆஜரானர். திரு. சி. கணேஷ் எதிரிக்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார். திரு. வேக்லி போல் வழக்கை நடத்தினர்.

மீனாட்சி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு 7, 8 மணியளவில் நானும் எனது மகன் பொன்னுத்துரையும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். ஒரு சப்தம் கேட்டு நானும் மகனும் வெளியே டோச் லைட்டுடன் வந்து பார்த்தோம். படலைக்கருகில் தாமுவைக் குத்திவிட்டு படலையால் எதிரி ஓடினர். பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜூரிமார் தொடர்ந்து வழக்கை நடத்த விரும்பவில்லை என்று ஏகமனதாகக் கூறியதனைத் தொடர்ந்து நீதியரசர் எதரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

# தொழிற் கந்தோரில் அனுஷ்டிக்கப்படும்முறை

## பழையதானதால் பலருக்கு வாய்ப்புகளில்லை

குருநாகலை, வெள்ளி

பல அரசாங்க காரியாலயங்களுக்குத் தேவையான ஊழியர்களை வேலையில் சேர்த்துக்கொள்ளும் சேவையிலீடுபட்டுள்ள தொழிற் கந்தோர் பழைய முறைகளை இன்னும் நடைமுறையில் வைத்துக்கொண்டிருப்பதால் தகுதி உள்ளவர்கள் அந்த காலிஸ்தானங்களில் கடமையாற்ற முடியாத நிலையிலிருக்கிறார்கள்.

இங்குள்ள பலர் இங்கிருக்கும் தொழிற்கந்தோரில் தமது பெயர்களைப் பதிவு செய்ய முடியாத விதத்திலிருக்கிறார்கள்.

குறிப்பிட்ட சில கிரேட் ஓவர்சியர் வேலைகளுக்கு பயிற்சி பெற்றிருந்தால் ஆங்கிலமோ அனுபவமோ தேவையில்லாதிருந்தும் இவ்விதம் தகுதிகள் தேவை எனக் கோரபடுகிறது.

சமீபத்தில் நெற்காணிச் சட்டத்தின் கீழ் இயங்கும் பகுதி அதிகாரிகளுக்குக் கீழ் வேலை செய்வதற்கு குமாஸ்தாக்கள் தேவை பட்டார்கள். இவர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் இவர்கள் தகுதி பெற்றவர்கள் என காணப்பட்டார்கள். ஆனல் விவசாயப் பாடசாலையின் தராதரப்பத்திரம் தேவை என அதிகாரிகள் வற்புறுத்தினர்கள். இதனல் தொழிற் கந்தோரால் இந்த தகுதிகளெல்லாம் கொண்டவர்களை அனுப்ப முடியாது போயிற்று.

தொழிற்கந்தோர், பலகாலமாக பதிவு செய்திருப்பவர்களுக்கேதொழில்விஷயங்களில். முதலிடம் கொடுக்கிறது இந்த ரீதியிலே பதிவு செய்யப்பட்டவர்கள் அழைக்கப்படுகின்றனர். இதனல் காலியான வேலை வரும் சமயத்தில் குறிப்பிட்ட தகுதி ஒருவருக்கு இருந்தாலும் அவர் புதிதாகப் பதிந்திருந்தால் அவருக்கு அந்த வேலைகிடையாது போகிறது.

### பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்ட கடிதங்கள் சிக்கின

கல்கத்தா, பெப். 5

பெரிய மாங்கனிஸ் வர்த்தகர் முகமது சிராஜ் உத்தீன் அவரது மாப்பிள்ளை, அவரது இரு மருமகன்கன் கடல் சுங்கச் சட்டத்தின் கீழும் அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் கீழும் கைது செய்யப்பட்டது நகரில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது.

சிராஜ் உத்தீன் காரியாலயத்திலும், ஜாகையிலும், சுங்க இலாகா அதிகாரிகள் விரிவான சோதனைகள் நடத்தினர். இதில் ஏராளமான தஸ்தாவேஜுகளும், பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்ட கடிதங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது.

பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் கோர்டில் சிராஜ் உத்தீன் சார்பில் வாதாடிய வக்கீல் 1959 ஆண்டில் ஏராளமான தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டன என்றும் நான்கு ஆண்டுகளாக சுங்க அதிகாரிகள் இவ்விவகாரத்தில் முடிவு காணுமல் இருப்பதுவே குற்றச்சாட்டுக்கள் ஆதாரமில்லாதிருப்பதனைக் காட்டுகிறதென்றும் எடுத்துக்காட்டினர்.

சுங்க அதிகாரிகளின் கோரிக்கையின்பேரில் மேற்கொண்டு புலன் விசாரணைக்கு ஜுன் முதல்திகதிவரை பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் அவகாசம் கொடுத்தார்.

### பிஜாப்பூரில் ஜாதிக் கலகம்

#### எண்மர் பலி

பிஜாப்பூர், ஏப்.5

வட இந்தியாவில் பிஜாப்பூர் என்ற இடத்திலுள்ள கிராமமொன்றில் ஏற்பட்ட ஜாதிக் கலவரத்தில் எட்டுப் பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

கலகத்தை அடக்குவதற்காகப்பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் மாண்டதாகவும் கலகக்காரரில் ஒரு கோஷ்டியினர் சுமார் 65 விடுகளுக்குத் தீவைத்ததில் பெண்களும் குழந்தைகளும் உட்பட ஆறு பேர் மாண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# 99 சீனர்களுக்கு சொத்துவிற்கத்தடை

பம்பாய், ஏப்.5

மார்ச் 16-ம் திகதிவரை பம்பாயிலுள்ள 99 சீனப் பிரஜைகள் தங்கள், சொத்துக்களை விற்க வொட்டாதபடி தடுக்கப்படடிருப்பதாக மகாராஷ்டிர உதவி ரெவின்யூ மந்திரி ராஜ்ய சபையில் அறிவித்தார் பாதுகாப்பு விதிகளில் இந்த தடை விதிக்கப்பட்டதென அவர் சொன்னர். 66 குடியிருப்புக் கட்டிடங்களும் 33 பிறவகைக் கட்டிடங்களும் இவவாறு வில்படாமல் தடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினர்.

## காங்கிரஸின் பிரசார முயற்சி

யாழ்ப்பாணம், சனி

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி மகாநாடு சென்ற வாரம் வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து காங்கிரஸின் பிரசாரக் கூட்டங்களை யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

காங்கிரஸின் பொதுக்கூட்டமொன்று விரைவில் நல்லூரில் அல்லது உடுப்பிட்டித் தொகுதியில் நடத்தப்படலாமெனவும் அறியப்படுகிறது.

## ரஷ்ய ராக்கெட்

மாஸ்கோ ஏப். 5

ரஷ்யா அனுப்பியிருந்த ராக்கெட் இன்று சந்திரனை அடையுமென்றும், அதன் றேடியோ தகவல் தொடர்புகள் நல்லமுறையில் வேலை செய்கிறதாயும் அறிவிககப்பட்டது.

புத்தாண்டின் புனித விருந்து!
மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண விஜிதா ஜெமினி
(திருமலை) (ஹட்டன்) (ராகலை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது
காணத்தயாராகுங்கள்

★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி. எஸ்.துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி. டி. ராஜகாந்தம்
★கள்ளபார்ட் நடராஜ்
மற்றும் பலர் நடித்த
சிவகாமி பிக்சர்ஸ்
குமார ராஜா
திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.
இசை டி.ஆர். பாப்பா
டைரக்ஷன் ஜி. கே. ராமு
நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்
பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

4-வது வெற்றி வாரம் !
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)
மற்றும் 5 திரைகளில்
சிவாஜி கணேசன் சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன் !

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி—சரோஜாதேவி
நடித்த
பார்த்தால் பசிதீரும்
தமிழ்ப்பசும படம்.

2வது வாரமாக
காண்பிக்கப்படுகிறது !
முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
ஓடியன் (கல்கிசை)
2-15, 6, 9-30 மணி
ஓடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி
ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த

ஆடிப் பெருக்கு
டைரக்ஷன்: கே. சங்கர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.